விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்


SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-3550)

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 09 சனிக்கிழமை (25.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

## தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வை விட
# செல்வாக்கையும் பணத்தையுமே த.தே.கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது!
## கூட்டமைப்பு எம்.பிக்கள் மீது முதல்வர் சாடல்



(யாழ்ப்பாணம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட அரசியல் செல்வாக்கையும் பணத்தையும்தான் எதிர்பார்கின்றார்கள் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வையும் நீண்ட கால அரசியல் தீர்வையும் அவர்கள் நாட முனைவதாகத் தெரியவில்லை என கடுமையான விமர்சனத்தை தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று சனிக் கிழமை காலை 8 மணியளவில் இடம்பெறவு 23



## வீதி விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்கு சென்று திரும்பும்போது வீதி விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்

புலோலி தெற்கை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நவரட்ணராஜா ராஜேந்திரம் (வயது 69) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் இரவு புலோலி 23

## தேர்தலை நடத்தக் கோரி கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருவதை கண்டித்து கூட்டு எதிர்க்கட்சியின் மாகாண சபை பிரதிநிதிகளின் ஒன்றியத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் ராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு எதிரில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேர் 23

## வடக்கு, கிழக்கு காணிகள்
## இராணுவ ஆலோசனைக்கு அமையவே அரசால் விடுவிப்பு

(கொழும்பு)

முப்படை தளபதிகளின் ஆலோசனைகளுக்கு அமையவே வடக்கு, கிழக்கில் காணிகள் விடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பதவிய வேஹெரகல பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு 23

## சிக்கல் நிலைமையை தவிர்த்து தேர்தலை உடன் நடத்துவோம்
## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி

(கொழும்பு)

தேர்தல் முறைமை தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலையே மாகாணசபை தேர்தல் பிற்போடப்பட்டு வருவதற்கு காரணமாகும்.

தேர்தலை விரைவாக நடத்துவதற்கே முயற்சித்து வருகின்றோம் தேர்தல் முறைமை தொடர் 23



## ரயில் தொழிற்சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் 29ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அனைத்து ரயில் சேவை தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

ரயில் சேவை தொழிற்சங்க நிர்வாகக் குழுவினரின் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இந்தநிலையில் குறித்த கலந்துரையாடலின் நிறை 24

## டொலருக்கு நிகரான
## இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கமைய டொலருக்கான 23

## தென்பகுதியினர் வட பகுதியில் மீன்பிடிக்க தடையேதுமில்லை
## இனவாதம் பேச வேண்டாம் விமலை எச்சரித்தார் மனோ



(கொழும்பு)

தென் பகுதி மீனவர்களுக்கு வட பகுதியில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்படுகின்றமையா? இலங்கையில் ஏற்பட்டுள்ள நல்லிணக்கம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவில் மீனவர்களின் படகுகளுக்கு தீ வைக் 23

## சிவில் உடைகளில் இருந்த பொலிஸ் - விசேட அதிரடிப்படை
## யாழ்.நகர் பகுதியில் மோதல்

(யாழ்ப்பாணம்)

சிவில் உடையில் இருந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு இடையில் பலத்த மோதல் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு யாழ் நகர்ப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்த மோதலில் விசேட அதிரடிப்படை அதிகாரியை தாக்கிய பொலிஸார் இருவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

நேற்று முன்தினம் இரவு யாழ் நகர் பகுதியில் பொலிஸார் இருவர் சிவில் உடையில் நின்றுள்ளனர்.

அப்போது விசேட 23

## கொக்குவில் வன்முறை
## இரு இளைஞர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் வீடு ஒன்றுக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரை எதிர்வரும் 28-ம் 23

## அனர்த்தத்துக்கு மத்தியில்
## நேர்த்தியை பூர்த்தி செய்த சந்நிதி பக்தர்

(கரணவாய்)

தூக்குக் காவடி ஒன்றில் நிகழவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்ட சம்பவம் வடமராட்சி மந்திகைப் பகுதியில் இடம் 23

## மாகாணசபை தேர்தல் தொடர்பான
## எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றில் தோற்கடிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் எல்லை மீள் நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் ஏகமனதாக தோற்கடிக்கப்பட்டது.

மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து அறிக்கை வாக்கெடுப்புக்கு நேற்று வெள்ளிக்கிழமை மாலை விடப்பட்டது.

அறிக்கைக்கு ஆதரவாக வாக்குகள் ஏதும் அளிக்கப்படவில்லை. அறிக்கைக்கு எதிராக 139 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இதன்மூலம் மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கை 24

## யாழ். நாகவிகாரையில் திருடிய இருவர்
## கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாக விகாரையின் உண்டியலை திருடிய பெரும்பான்மை இனத்தவர் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 21-ம் திகதி இரவு நாக விகாரையில் உள்ள உண்டியலை உடைத்ததாக அங்கிருந்து 23

# சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்காது!

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு குழு இதனை அறிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் 12.5 கிலோ எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் இந்த தகவல்களை வாழ்க்கைச் செலவுக் குழு முற்றாக நிராகரித்துள்ளது.

தற்போதையசந்தை நிலவரங்களின் படி, சமையல் எரிவாயுவின் விலையை 158 ரூபாயால் அதிகரிக்குமாறு சமையல் எரிவாயு நிறுவனங்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


வன்னியின் இறுதி மன்னன்

மாமன்னன்

**மாவீரன் பண்டார வன்னியனின் 215ஆவது ஆண்டு வெற்றி நினைவுநாள் அழைப்பு**



காலம்:-இன்று (25.08.2018) சனிக்கிழமை

நேரம்:-பி.ப 1.30 மணி

இடம்:-பண்டாரவன்னியன் உருவச்சிலை வளாகம், கற்சிலைமடு.

தலைமை

**திரு.இ.சந்திரரூபன் (தம்பியன்)**

(தலைவர்-பண்டாரவன்னியன் அறங்காவற்கழகம்-முல்லை மாவட்டம்)

**நிகழ்ச்சி நிரல்**

- மாவீரன் பண்டாரவன்னியனின் திருவுருவப்படம் தாங்கிய பாரம்பரிய கலாசார நிகழ்வுகளோடு பேரணி ஆரம்பம்
- பொதுச்சுடரேற்றல்
- கொடியேற்றல்
- ஈகச்சுடரேற்றல்
- மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச் சிலைக்கான மலர்மாலை அணிவித்தல்
- மலர் வணக்கம்
- அகவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- கருத்துரைகள்
- சிறப்புரைகள்
- நன்றியுரை

**அன்புடையீர்!**

**வன்னியின் இறுதி மாமன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 215ஆவது வெற்றி நினைவு நிகழ்வில் தங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*பண்டார வன்னியன் அறங்காவற் கழகம்*

*முல்லை மாவட்டம்*

**விளம்பர அனுசரணை:-வணிகர் கழகம் புதுக்குடியிருப்பு**


## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

வட மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினரின் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நாவலர்கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இச் சீட்டிழுப்பானது இல.51, வைமன் வீதியில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

### திருமலையில் அமெ.போர்க்கப்பல்

அமெரிக்கக் கடற்படையின் பாரிய போர்க்கப்பலான யுஎஸ்எஸ் அங்கரேஜ் ஐந்து நாட்கள் பயணமாக நேற்று திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

ஈரூடக தரையிறக்க போக்குவரத்துக் கப்பலான யுஎஸ்எஸ் அங்க ரேஜில், அமெரிக்க கடற்படையினர் மற்றும் அமெரிக்க மரைன் படைப்பிரிவின் 13 ஆவது அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்த படையினரும் திருகோணமலை வந்துள்ளனர்.

208 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில் உள்ள 34 அதிகாரிகளும் 900 படையினரும், திருகோணமலையில் தரித்து நிற்கும் போது, இலங்கை கடற்படையின் மரைன் படையினருடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர். (ம)


## மங்களபதி ஆரோக்கிய உணவுகள்
(விற்பனை மற்றும் கண்காட்சி)

சிறுவர் முதல் பெரியவர் வரை உண்ணக்கூடியதும் உடலிற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அதிகரிக்க வல்லதும் மேலும் நீரிழிவு, உடற்பருமன், இருதயவியாதிகள், ஹோமோன் குழப்பங்கள், உயர் இரத்த அழுத்தம், குடற்புண்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவை வராமல் தடுக்கவும் உடன் தயாரித்து உண்ணக் கூடியதுமான உணவுவகைகளை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும் கண்காட்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

**மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை**

நல்லூர், யாழ்ப்பாணம். 0212054066 (5468)

## விலங்கு நலன் மற்றும் பாதுகாப்பு அமைப்பு (AWPA)

TAKE ME HOME

**நாய்/ பூனைக்கான இலவச கருத்தடை மற்றும் அன்ரீ ரேபீஸ் தடுப்பூசி போடுதல்-யாழ்ப்பாணம்**

(i) இடம்:-திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய மைதானம்

காலம்:-28.08.2018 காலை 10மணி தொடக்கம்

(ii) இடம்:-தெல்லிப்பழை தந்தை செல்வா ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக

காலம்:-29.08.2018 காலை 07 மணி தொடக்கம்

**தொடர்புக்கு:-**

வித்யா 0766585600 (Animal Lovers of Jaffna)

சியோனா-0773450031 (AWPA)

www.awpasl.org (இ)


# திருவெண்காட்டில் இன்று தேர்த் திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

இன்று காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

இதேவேளை நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (ம)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

APEX TRAVELS

- சகல நாடுகளுக்கான விமான பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களை இங்கிருந்தவாறே விண்ணப்பிக்கலாம்.
- ஏனைய நாடுகளுக்குமான வீசா உதவிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:0773504700, 0212228008.

இல.105/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை (தங்கராசா) புஸ்பராணி



அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை (தங்கராசா) புஸ்பராணி நேற்று (24.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி-கனகமுத்து தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும், பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற பொறியியலாளர்-இ.போ.ச)வின் அன்பு மனைவியும், வித்யா (சுவிஸ்), ஜனந்தன் (கனடா), துஷிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனேந்திரராசா, காயத்திரி, துஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஜா, ஹரிணி, அறன், ஆதினி, விகான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற துரைராஜசிங்கம், காலஞ்சென்ற தவராஜசிங்கம் (ரெலிகோணர் முன்னாள் உரிமையாளர்), பத்மராணி, தயசிங்கம், சந்திரசிங்கம் (பிரான்ஸ்), குகதாசசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும், புஸ்பராணி, சித்திரலேகா, காலஞ்சென்ற குணசிங்கம், மதிவதனி, விஜயகுமாரி, சுகந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது மட்டுவில் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிலிப்வீதி, சந்திரபுரம் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.** (சி-3630)

**தகவல்:-குடும்பத்தினர் 0779947502, 0214915636**


**கார். வான் வாடகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த குத்தகை அடிப்படையில் வாடகைக்கு தேவை.

0710404978 (5466)

**வாடகைக்கு**

நாவலர் றோட், நல்லூரில் வீட்டின் இரு அறைகளும் ஓர் அறையுடன் குளியலறை இணைந்தது வாடகைக்கு உண்டு.

T.P:-0762160099 (5467)

## நெல்லை பவன்

உயர்தர சைவ உணவகம்

**காலை உணவு**

இட்லி
தோசை
இடியப்பம்
பரோட்டா
பிட்டு

**மதிய உணவு தினமும் பெற்றுக்கொள்ள முடியும்**

**வெள்ளிக்கிழமைகளில்**-புரியாணி

**செவ்வாய்க்கிழமைகளில்**-லெமன் றைஸ், தயிர் சாதம், புளிசாதம்

**இரவு உணவு**

மசாலா தோசை
பொடித் தோசை
பேப்பர் தோசை
நெய் தோசை
வெங்காய தோசை
ஊத்தாப்பம்
வெங்காய ஊத்தாப்பம்

இட்லி
பரோட்டா
சிலிபரோட்டா
கொத்து றொட்டி
இடியப்ப கொத்து
இடியப்பம்

ஓடர்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் (சி-3625)

# யாழ்.மாவட்டத்தை பௌத்த மயமாக்கும் எந்தவொரு வேலைத் திட்டமும் இல்லை

## நாகவிகாரையின் விகாராதிபதி விமலதேரர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தை பௌத்தமயமாக்கும் எந்தவொரு வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என யாழ்.நாகவிகாரையின் பிரதம விகாராதிபதி மீகஹ ஜந்துரே சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

நாகவிகாரையின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தை பௌத்தமயமாக்குகின்ற எந்தவொரு வேலைத் திட்டத்திலும் நாம் ஈடுபடவில்லை. மாறாக யாழ்ப்பாண மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுப் பாலமாகவே நாம் செயற்படுகின்றோம்.

சமய அடிப்படையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே எமது விருப்பமாக உள்ளது. குறிப்பாக பௌத்த சமயத்தோடு இணக்கப்பாடான சூழல் யாழ்.மாவட்டத்தில் உருவாக வேண்டும் என்றே விரும்புகின்றோம். மாறாக விகாரைகளை கட்ட வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படவில்லை.

பௌத்த காங்கிரஸ்க்குச் சொந்தமான காணிகள் யாழ்.மாவட்டத்தில் பல இடங்களிலும் உள்ளன. அவற்றில் அறிந்தோ, அறியாமலோ மக்கள் குடியிருப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் இங்கு குடியிருக்கின்ற மக்களை வெளியேற்றுகின்ற எந்தவொரு எண்ணமும் எமக்குக் கிடையாது.



அதே விதத் தில் பொது தேவைகளுக்காக சில கட்டட நிர்மாணங் களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றையும் நாம் இடிக்க விரும்பவில்லை. எமது மேற்பார்வையில் அவற்றின் வழக்கமான செயற்பாடுகளோடு நல்லிணக்கமையங்களாக அவை இயங்க முடியும். இதே நேரத்தில் பௌத்த காங்கிரஸ்க்கு சொந்தமான இடங்களில் பௌத்த அடையாளங்கள் சிலவற்றை பேணுவது உசிதமானதாக இருக்கும் என்பது எனது கருத்தாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# காமினி செனரத் உட்பட நால்வருக்குப்பிணை



(கொழும்பு)

லிற்றோ ஹாஸ் நிறுவனத்துக்கு நிதி பரிமாற்றத்தில் ஈடுபட்டபோது, அதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலையான ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட நால்வருக்கு அதி குற்றச்சாட்டு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இக் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு இலட்சம் ரூபாய் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்லவும் இவர்களுக்கு விசேட மேல் நீதிமன்றம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை மூலம் அரசின் இரட்டை நிலைப்பாடு வெளிப்படுகிறது

## கூட்டு எதிரணி கூறுகிறது




புதிய தேர்தல் முறைமைக்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தொடர்பான வாக்கெடுப்பின் போது அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாட்டை காணக் கூடியதாக இருக்கும்-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இதனை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஷேஹான் சேமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளே வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளன.

அரசாங்கம் தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அஞ்சுகிறது.

இந்த நிலையிலேயே புதிய தேர்தல் முறைமை ஒன்று கொண்டு வருவதற்கு முற்படுகிறது.

எனவே, இவ்வாறான ஜனநாயகத்துக்கு எதிரான செயல் ஒன்றை மேற்கொள்ள வேண்டாம்எனவும்அவர்இதன்போது கோரிக்கை விடுத்தார். (இ-7)

# கோத்தாவுக்கு வழங்கப்பட்ட உத்தரவு மீளப்பெறப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேரை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வழங்கப்பட்ட உத்தரவு மீளப் பெறப்பட்டுள்ளது.

டீ.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியகம் அமைப்பது தொடர்பில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொழும்பு பிரதான நீதவான் 7 ஆம் திகதி ஆஜராகுமாறு கோத்தபாயராஜபக்ஷவிற்கும் ஏனைய ஆறு பேருக்கும் வழங்கப்பட்ட உத்தரவை மீளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனர்த்த முகாமைத்துவம் குறித்த தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கொழும்பில்





(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வல்லுநர்களின் சங்கமென்பது இலங்கையை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பதற்கான முறைமையை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில் வல்லுநர்களின் ஒன்றியமாகும்.

ஐக்கிய இராச்சியத்தின் Huddersfield பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்டிலந்தி அமரதுங்கவினால் தலைமை உரையாற்றப்பட்டது.

பேராசிரியர் டிலந்தி அமரதுங்கவுக்கு ஜனாதிபதி நினைவுச் சின்னம் வழங்கினார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் செயலாளர் என்.ஏ.சிசிர குமாரவினால். ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி புத்தி வீரசிங்க உள்ளிட்ட சங்கத்தின் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம் பயணங்கள் கைகூடும் போசன நன்மையுண்டு

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், குழப்பங்கள் குறையும்.

**மிதுனம்:** எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, வேலைச்சுமை கூடும் நாள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

இராசி பலன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம் இரவு 2.40 மணிக்கு கும்-சந் | | ராகு. புத |
| கேது. சந். செவ் | | | சூரி |
| சனி | | குரு | சுக் |

25.08.2018

ஆவணி 09, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

சதுர்த்தசி பிற்பகல் 4.02 மணிவரை

திருவோணம் முற்பகல் 11.29 மணிவரை

சுபநேரம் 3.05-4.35 மணிவரை

இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

செல்வச் சந்நிதி முருகன் தேர்

வளவன்

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபடவேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், நாவன்மையால் நல்லபெயர் கிட்டும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்:** சேமிப்பு உயர்வதற்கான வழியைக்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், நீண்டநாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை திடீரென செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

# அரையிறுதியில் லங்காசயர்



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ரி20 பிளாஸ்ட் காலிறுதி ஆட்டத்தில் கென்ட் அணியை வீழ்த்திய லங்காசயர் அணி அரையிறுதிக்கு ஜோராக முன்னேறியது.

இங்கிலாந்தில் ரி20 பிளாஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. லீக் ஆட்டங்கள் முடிந்து தற்போது காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகிறது.

முதல் காலிறுதி ஆட்டத்தில் கென்ட் - லங்காசயர் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற கென்ட் அணி முதலில் துடுப்பாட் டத்தை தேர்வு செய்தது.

அதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய கென்ட் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங் களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவரும் விக்கீகட் காப்பாள ருமான சாம் பில்லிங்ஸ் அதிகபட்சமாக 37 ஓட்டங்களை எடுத்தார்.

134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் லங்காசயர் அணி களம் இறங் கியது.

முதல் மூன்று வீரர்களான டேவியஸ் (15), பட்லர் (0), லில்லி (9) சொற்ப ஓட்டங் களில் ஆட்டமிழந்தாலும், ஜென்னிங்ஸ் சிறப்பாக விளையாடி 46 ஓட்டங்கள் சேர்த்தார்.

அதன்பின் வந்த அணித் தலை வர் விலாஸ் கிளார்க் ஆகி யோர் ஆட்டமிழக்கா மல் முறையே 30, 29 ஓட் டங்கள் எடுக்க லங்காசயர் 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற் றியிலக்கை (134) 6 விக்கெட்டுக் க ள ா ல அடைந்த து.

# பிஎஸ்ஜி விருப்பம்



பார்சிலோனா மிட் பீல் டர ா ன இவான் ராகிடிச்சை வாங்க பிரான்ஸ் கழக மான பிஎஸ்ஜி விருப்பம் தெரிவித்துள்ளதாக தக வல்கள் தெரிவிக்கின் றன.

குரோசியா அணியின் மிட்பீல்டர் இவான் ராகிடிச் (வயது- 30), இவர் 2014 முதல் பார்சிலோனா அணிக்காக விளையாடி வரு கிறார். இவரது ஒப்பந்தம் 2021 வரை இருக்கிறது.

இந்நிலையில் பிரான்ஸ் நாட்டின் முன்னணி கழக அணியான பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் 81 மில்லியன் பவுண்டிற்கு ராகிட்சை வாங்க விருப்பம் தெரிவித்துள் ளது.

பார்சிலோனாவும் இந்த தொகைக்கு கொடுக்க தயாராக இருக்கிறது. அதேவேளையில் இவான் ராகிட்சியின் விருப்பத்தையும் கேட்க இருக்கிறது. மேலும் பவுலினோ, இனியஸ்டா ஆகியோரை வெளியேற்றியுள்ளது. அவர்களுக்கான மாற்று வீரர்களை ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

இந்நிலையில் ராகிட்சை வெளியேற்றினால் மூன்று வெற்றிடம் ஏற்படும் என்பதால் பார்சி லோனா யோசித்து வருகிறது.

பார்சிலோனா தங்களது வருமானத்தில் 70 சதவிகிதத்திற்கு மேல் சம்பளமாக வழங்கக் கூடாது என்று திட்டமிட்டுள்ளது. இதனால் அதிக அளவில் சம்பளம் பெறும் வீரர்களை விற்க ஆர்வம் காட்டி வருகிறது.

# பிக்பாஷில் இணைவு





ஏலத்தில் ஏலம்

இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் ஜோ ரூட், துணைத் தலைவர் ஜோஸ் பட்லர் ஆகிய இருவரும் பிக் பாஷ் ரி20 லீக் தொடரில் விளையாடுகிறார்கள்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியில் விளையாடும் முன்னணி வீரர்கள் பொதுவாக வெளிநாட்டில் நடைபெறும் ரி20 லீக் தொடரில் பங்கேற்று விளையாடுவது கிடையாது. ஆனால் தற்போது ஏராளமான வீரர்கள் வெளிநாட்டு ரி20 லீக்கில் விளையாட ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

2018 ஐபிஎல் தொடரில் 10க்கும் மேற்பட்ட வீரர்கள் விளையாடினர். இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவரும் உலகின் தலைசிறந்த வீரருமான ஜோ ரூட் ஐபிஎல் போகவில்லை. அவரை எந்த அணியும் ஏலம் எடுக்க ஆர்வம் காட்டவில்லை.

இந்நிலையில் தற்போது ஜோ ரூட், ஜோஸ் பட்லர் ஆகியோரை பிக் பாஷ் ரி20 லீக்கில் விளையாடும் சிட்னி தண்டர் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. 2018-19 சீசனில் இருவரும் ஏழு போட்டிகளில் விளையாடுவார்கள். அதிரடி துடுப்பாட்ட வீரரான ஜோஸ் பட்லர் கடந்த பிக்பாஷ் சீசனில் 202 ஓட்டங்கள் எடுத்தார்.

# ‘உலகக்கிண்ணத் தொடரே இலக்கு’

– குருணால் பாண்ட்யா



இங்கிலாந்தில் நடைபெறும் உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடிப்பதே உச்சக் கட்ட இலக்கு என குரு ணால் பாண்டியா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வேகப் பந்து வீச்சு சகலதுறை வீரராக திகழ்பவர் ஹர்திக் பாண்டியா, இவரது அண்ணன் குருணால் பாண்டியா. இருவரும் ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடியபோது பிரபலம் ஆனார்கள்.

ஹர்திக் பாண்டியா சர்வதேச போட்டியில் விளையாடி வருகி றார். ஆனால் குருணால் பாண் டியாவிற்கு இன்னும் இடம் கிடைக்கவில்லை. இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர் சிறப்பாக துடுப்பாட்டமும் செய்து வருகிறார்.

இதனால் அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற இருக் கும் உலகக் கிண்ணத் தொடருக் கான இந்திய அணியில் இடம் பிடிப் பதே உச்சக்கட்ட இலக்கு என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து குருணால் பாண்டியா கூறுகையில் "என்னு டைய உச்சக்கட்ட இலக்கே இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்பதுதான். நான் ஒவ்வொரு தொடராக சென்று கொண்டிருக்கிறேன். ஒவ் வொரு மேட்ச் என்று கூட சொல்ல லாம். நான் தொடர்ச்சியாக சிறப் பாக ஆட்டத்தை வெளிப்படுத்து கிறேன். நான் என்ன விரும்பு கிறேனோ, அதை பெறுவேன்.

இறுதியாக அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறும் உல கக் கிண்ணத் தொடரில் விளை யாட வேண்டும். தற்போது நான் சென்று கொண்டிருக்கும் வழியில், நான் அந்த உயரத்தை எட்டுவேன் என்று நம்புகிறேன்" என்றார்.

# பிரான்ஸ் அணித் தலைவர் கைது

குடிபோதையில் காரை ஓட்டிய விவகாரத்தில் பிரான்ஸ் மற்றும் டோட்டன்ஹாம் கால் பந்து அணியின் தலைவர் லோரிஸ் கைது செய்யப்பட் டுள்ளார்.

பிரான்ஸ் கால்பந்து அணி யின் கேப்டனாக இருப்பவர் ஹியூகோ லோரிஸ். விக்கெட் காப்பாளராக இருக்கும் இவரது தலைமையில் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பிரான்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இவர் இங்கிலீஷ் பிரீ மியர் லீக்கில் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிக்காக விளை யாடி வருகிறார். இவர் நேற்று அதிகாலை குடித்து விட்டு கார் ஓட்டியதாக தெரி கிறது. மத்திய லண்டனில் 2.20 மணிக்கு பொலிஸார் இவரது காரை நிறுத்தினர்.

அப்போது குடித்துவிட்டு கார் ஓட்டியது சோதனை யில் தெரிய வந்தது. இத னால்கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு 7 மணி நேரம் காவலில் இருந்தார். பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டு ள்ளார். செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிடப் பட்டுள்ளது.

# செல்வச் சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்பு மலர்- 25.08.2018



















### தேரினில் வந்தெம் தீமைகள் அழிப்பாய்

தொண்டைமானாற்றங் கரைதனிலே
தோன்றிய வேலவனே
சண்டமாருதங்கள் புரிந்துமே
சூரத்தனங்கள் அழித்தவனே- உனைக்
கண்ட மாத்திரத்தில் ஓடிட செய்வாய்
எமை விரட்டும் பகையை - இன்று
தேரினில் வந்தெம் தீமைகள்அழித்தெம்
ஊரினில் நிம்மதி சேர்த்திடய்யா

### விழியாக எமைக்காக்கும் சந்நிதியான்

புதிதான தேர்முட்டி தனில் நின்று
புறப்பட்டு வருகிறான் சந்நிதியான்
அழியாத பக்தி வெள்ளம் சூழ்ந்துவர
வழிபாட்டு மரபோடு சேர்ந்து வர
விழியாக எமைக் காக்கும் சந்நிதியான்-இன்று
பழிபாவம் அழித்தெம்மைக் காத்திடவே
வழியாக அசைந்தாடித் தேரில் வாறான்

புலோலியூர் வேல்நந்தன்



# செல்வச் சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்பு மலர்- 25.08.2018


Arun
Tex &
Fancy Palace
பிரதான வீதி,
நெல்லியடி.
077 714 9459
021 226 2857

ஸ்கை ரோஸ்
சிதம்பரம் கவரிங்
நெல்லியடி லொத்தர் சபை முகவர்
நெல்லியடி ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்
தேசிய லொத்தர் சபை
அபிவிருத்தி லொத்தர் சபை } முகவர்
த.சசிகரன்:- 077 175 4557
அனைத்து வொறண்டி கவரிங் நகைகளும் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம். கவரிங் நகைகளுக்கு பவுணதண்ணி போட்டுத் தரப்படும்.
Branch: New Market, Nelliyady.
No.01, Hospital Road, Bus Stand, Jaffna.
TP:- 077 153 6914

DURJA NAGAIPPOONNKA
டுர்ஜா நகைப்பூங்கா
Kodikamam Road,
Nelliyady.
TP:- 077 952 5392

சிவசக்தி சலூன்
சிகை அலங்கார நிலையங்களுக்கான உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி,
நெல்லியடி.
TP:- 077 369 7078

V.A.M. ENGINEERING
வீ.ஏ.எம்.எஞ்ஜினியரிங்
இரும்பு & அலுமினியம், கிளாஸ்
கேற், கிறில், சுருக்கு கேற் அனைத்து வகையான இரும்பு வேலைகளும் அலுமினிய வேலைகளும் செய்து கொடுக்கப்படும். மற்றும் வாகன வெல்டிங் வேலைகள்.
யாழ்.வீதி,
நாவலர் மடம்,
நெல்லியடி.
Regd No. 376
vamnelliady@gmail
M.மனோ (கட்டியண்ணா)
TP:075 254 3157,
077 711 8960, 021 226 4330
Fax: 021 226 4330

ஸ்ரீ அம்பாள் ஜுவலர்ஸ்
22 கரட் தங்க நகை வியாபாரம்
TP:-021 320 5743
ஸ்ரீ சக்தி மாடம்
கோவில் மற்றும் விசேட வைபவங்களுக்குரிய பொருட்கள் விற்பனையாளர்
TP:- 021 491 1830
பிரதான வீதி, நெல்லியடி.

கிசோனி நகை மாளிகை
Kishoni Nahai Malihai
அதி நவீன டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
தங்க நகை வியாபாரம்
யாழ். வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
TP:- 077 364 3286

ஜனனி நகை மாடம்
Janany Nahai Maadam
22 கரட் தங்க நகைகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
TP:- 077 364 3286

நியூ வசந்தா வெண்மையகம்
உரிமையாளர்:- ந.ரவீந்திரன்
மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
திருமண வைபவங்களுக்கான தலைப்பாகை,
கோட் சூட் வாடகைக்கு விடப்படும்.
TP:- 077 923 8940

Mani NETCOM
வெளிநாடுகளுக்கான துரித பாசல்கள், கடிதங்கள் சேவை
M.M.V. ROAD, NELLYADY. 021 226 4877

சின்னவன் வெற்றிலைக் கடை
நெல்லியடி.
077 198 0978

மயூரா பூட் கோணர்
பிரதானவீதி, நெல்லியடி. TP:- 077 556 4810

ஞானம் ரிங்கர் வேக்ஸ்
GNANAM TINGER WORKS
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.
பெயின்ரிங் உரிமையாளர்:
ஞானம்
TP:- 077 401 0642

# செல்வச் சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்பு மலர்- 25.08.2018






## சர்வதேச இந்து இளைஞர் பேரவை நடத்தும்

# இந்து இளைஞர் மாநாடு-2018

ஆன்மீக ஊர்வலம் **காலை 9.00 மணி**
(வண்ணைச் சிவன் கோவில் முன்றல்)
காலை அமர்வு : **காலை 10 மணி**
(சிவயோக சுவாமிகள் அரங்கு)
மாலை அமர்வு : **மாலை 2.00 மணி**
(சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு)

**26.06.2018 ஞாயிற்றுக்கிழமை**

காலை 9 மணிக்கு இந்து இளைஞர் ஊர்வலம்
(வண்ணைச் சிவன் கோயிலில் இருந்து விழா மண்டபம் வரை)

திருமுன்னிலை வகிப்போர்:
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
(குரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)
**வண.மருதாசலம் அடிகள்**
(முதல்வர் பேரூர் ஆதீனம், தமிழ்நாடு)
**ஸ்ரீமத்.சுவாமி அக்ஷராத்மானந்த மகராஜ்**
(முதல்வர், இராமகிருஷ்ணமிஷன்,கொழும்பு)
**வண.சிதாகாஷானந்தா சுவாமிகள்**
(தலைவர்,சின்மயா மிஷன்,யாழ்ப்பாணம்)
**வண.வேதவித்யாசாகர சுவாமிகள்**
(தலைவர்,வேதாந்தமடம், கந்தர்மடம்)

காலை அமர்வு: காலை 10மணி
சிவயோக சுவாமிகள் அரங்கு -
மங்கல விளக்கேற்றல்

கடவுள் வாழ்த்து:
**திருமதி.சைந்தவி ஜனார்த்தனன்**
(விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்)

வரவேற்புரை:
**திரு.சி.சிவகாந்தன்**
(ஆசிரியர்,பூநகரி)

அரங்கத் திறப்புரை:
**திரு.இ.ரமணராஜா**
(விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

ஆசியுரை
திருமுன்னிலை வகிப்போர்
**கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
(பிரதம குருசுன்னாகம் கதிரமலை சிவன் கோயில்)

புத்தெழில் கரகம்:
**வழங்குவோர்: நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை**

தலைமையுரை:
**திரு. இ.சர்வேஸ்வரா**
(சிரேஷ்ட உதவிப் பதிவாளர், ஊவாவெல்லச பல்கலைக்கழகம்)

வாழ்த்துரை:
**பேராசிரியர் வ.மகேஸ்வரன்**
(தமிழ்ப் பேராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம்)

ஸ்தாபர் உரை:
**இலக்கிய கலைமணி திரு.சிவபாதம் கணேஸ்குமார்**
(ஸ்தாபர்,சர்வதேச இந்து இளைஞர் பேரவை)

யோக அரங்கம்:
**சர்வதேச யோக அரங்கம்**
நெறியாள்கை:திரு.உமாசுதன்

இசை அரங்கம் :
பாட்டு:திரு.தெ.திருவேரகன்
(அண்ணாமலை பல்கலைக்கழக முதுஇசைமணி)
வயலின்: திரு.கா.குகபரன்
(விரிவுரையாளர்)
மிருதங்கம்: பிரம்மஸ்ரீ.ந.சிவசுந்தரசர்மா

சிறப்புரை:
பொருள்:
**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**
வழங்குபவர்: இலக்கியச்சுடர் த.ராமலிங்கம்
(உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்,தமிழ்நாடு)

**லயப்ரம்மம்:**
பாட்டு:திரு.அ.அமிர்தசிந்துஜன்
வயலின்: திரு.கா.குகபரன்
மிருதங்கம்:திரு.நா.சிவசுந்தரசர்மா
கடம்:திரு.நா.மாதவன்
முகர்சிங்:திரு.செ.செந்தூரன்

**கருத்தாடுகளம்**
பொருள்: இந்துசமயம் நேற்று, இன்று, நாளை
தலைவர்: ''தமிழ்மாமணி'' தமிழருவி க.சிவகுமாரன்
1. ஆலயங்கள்-சி.சிவாம்சன்
2. இல்லங்கள்-த.கருணாகரன்
3. வேலைத்தளங்கள்-குண.சுதாகரன்
4. பொது இடங்கள்-கலாபூஷணம் மேழிக்குமரன்

நன்றியுரை-கோ.வசந்தரூபன்
(ஊடக இணைப்பாளர், சர்வதேச இந்து இளைஞர் பேரவை, இலங்கை)

மாலை அமர்வு: பிற்பகல் 2 மணி
(சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு)
மங்கல விளக்கேற்றல்:
கடவுள் வாழ்த்து:
வரவேற்புரை:
**செல்வன் வே.சதுசிகன்**
(மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி)

ஆசியுரை: ''செந்தமிழருவி'' சிவஸ்ரீ மகா.தர்மகுமாரக் குருக்கள்
(தலைவர், சைவ கலை இலக்கிய மன்றம், மன்னார்)

அரங்கத் திறப்புரை:
பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

வாழ்த்துரை:
**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
(தலைவர் வாழ்நாள் பேராசிரியர், பெருந்தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்)
**பேராசிரியர்: எஸ்.சிவலிங்கராஜா**
(ஓய்வுநிலை பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)
**திரு.அ.உமாமகேஸ்வரன்**
(பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

தலைமை உரை:
**திரு.சிவ.கஜேந்திரகுமார்**
(தலைவர், சர்வதேச இந்து இளைஞர் பேரவை, இலங்கை)

### இளையோர் கருத்தரங்கு

பொருள்: **இந்து அறிவியல்**
தலைவர்: **சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
(ஓய்வு நிலை விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)
சோதிடக்கலை: **சிவஸ்ரீ ஜெகதீஸ்வர மயூரக் குருக்கள்**
திருக்கோவிற் கிரியைகள்:
**சிவஸ்ரீ தியாக.மயூரகிரிக் குருக்கள்**
(ஆசிரியர், இந்துசாதனம்)
அன்றாட வாழ்வியல் நெறிகள்:
**செல்வி.ப.கதிர்தர்சினி**
(சட்டத்துறை மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்)
இந்து இலக்கியங்களில் அறிவியல்
**செல்வன் சி.மதீசன்**
(முகாமைத்துவ மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்)

**திருப்புகழ் நடனம்:**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவியர்

**''சான்றோர் கௌரவிப்பு''**
**ஈழத்தில் சைவமும் தமிழும் ஏற்றமுற உழைக்கும் சான்றோரை கௌரவித்தல்**
1. **திரு.வே.வினாசித்தம்பி** (புராண வித்தகர்)
2. **திரு.ஐ.தயானந்தராஜா** (ஓய்வுநிலை அதிபர்)
3. **திரு.பொ.மாணிக்கவாசகம்** (ஊடகவியலாளர்)

மாநாட்டு மலர் வெளியீடு
வெளியீட்டு உரை:
**கலாநிதி இ.ஜெயந்திரன்**
(உதவி விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

நாட்டிய நாடகம்:
கண்ணப்பர் குறவஞ்சி
நர்த்தனஷேத்ரா நடனக்கலையகம், யாழ்ப்பாணம்
நெறியாள்கை: திருமதி பிரியதர்சினி வாகீசன்
நடனம்: செல்வி.சௌமியா சுபாஸ்கரன் (லண்டன்)

பட்டிமண்டபம்
பொருள்: **மானுடத்துக்கு மகிழ்ச்சியும் ஏற்றமும் தருவதில் முந்தி நிற்பது பக்தியா? தொண்டா?**
நடுவர்: ''**இலக்கியச்சுடர்**'' த.ராமலிங்கம் (தமிழ்நாடு)

தொண்டே!
**திரு.ச.லலீசன்**
**திரு.சி.கணேஸ்குமார்**
**செல்வன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ**

பக்தியே!
**பேராசிரியர் தி.வேல்நம்பி**
**திரு.கு.பாலஷண்முகன்**
**செல்வன். ஜீவாசஜீவன்**

லண்டனில் இருந்து வருகை தந்து சிறப்பிப்போர்
**திரு.திருமதி.அகிலன் கலைச்செல்வி**
**திரு.திருமதி.சுபாஸ்கரன் தர்சினி**
**திரு.திருமதி.இரத்தினராசா கருணாதேவி**
**திரு.கந்தசாமி அருள்குமரன்**

நன்றியுரை:
''வித்தியா ரத்னா'' லசதீஸ்குமார்
(செயலாளர் சர்வதேச இந்து இளைஞர் பேரவை, இலங்கை)

சர்வதேச இந்து இளைஞர் பேரவை



## ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் 347 ஆவது பிருந்தாவன பிரவேச ஆராதனை-2018

**ஸ்ரீஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா பிருந்தாவனம் நல்லூர், யாழ்ப்பாணம்.**

**அபிஷேக ஆராதனை நிகழ்வுகள்**

***25.08.2018 தொடக்கம் 29.08.2018 வரை***

25.08.2018– சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 8.50 மணி வரை கொடியேற்றம் திருக்கதவு திறத்தல் , அபிஷேக ஆராதனை
25.08.2018– மாலை ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் பஜனை பிரசாதம் வழங்குதல்
26.08.2018 காலை 9.00 மணிக்கு அபிஷேக ஆராதனை, 1008 நாம அர்ச்சனை
26.08.2018 – ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் பிரசாதம் வழங்குதல்
27.08.2018 காலை 9 மணியளவில் 1008 சங்காபிஷேகம் உபயம் தலைவர் ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் ஆல்யம் , லிங்கநகர் திருகோணமலை
27.08.2018– மாலை ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் பஜனை பிரசாதம் வழங்குதல்
28.08.2018– காலை திருக்கதவு சாத்துதல் (பிருந்தாபன பிரவேசம்) 10.35 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து சுவாமிகள் அம்பிகையை வலம் வந்து ஊஞ்சல் அமர்ந்து தரிசனம் கொடுத்து ''இந்து ஜனகே கோபிந்த நின்ன பாதார விந்துவ தோரோ முகுந்தா'' என்ற பாடல் பாடிக் கொண்டிருக்கும் பொழுது குருராஜர் பிருந்தாவன பிரவேசம் செய்ய திருக்கதவு சாத்தப்படும். மங்கள ஆராத்தியுடன் முடிவடையும். அதன் பின் மகேஸ்வர பூசை (அன்னதானம்) வழங்கப்படும். அடியார்களே குருராஜரின் அருள் ஆசி பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
28.08.2018 – மாலை 3.30 மணி ஸ்ரீ லலிதானஸ்ர நாம பாராயணம், பஜனை பிரசாதம் வழங்குதல்
29.08.2018 – காலை 9 மணியளவில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை , மாலை 3.30 மணி ஸ்ரீ லலிதானஸ் நாம பாராயணம்.
மாலை 3.30 மணி ஸ்ரீலலிதானஸ்ர நாம பாராயணம் , பஜனை பிரசாதம் வழங்குதல்.

**தர்மகர்த்தா- திருமதி- சிவசிதம்பரம் சசிதேவி,**
**திரு.சிவசிதம்பரம் நதிஷ் குருசேவையில் இருக்கும் அடியார்கள்.**

(5456)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 28
உயரம்: 6'3"
தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில் குவைத்
தொ.இ: B/436

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 21சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்
தொ.இ: B/449

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 37 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BEdஆசிரியர்
தொ.இ: B/455

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 51 உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில்
தொ.இ: B/456

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 37 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில்
தொ.இ: G/733

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 17 செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:Bed/ஆசிரியர்
தொ.இ: G/735

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 24 உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc தனியார் தொழில்
தொ.இ: G/739

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 69செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/760

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# வரட்சியினால் சிறுபோக நெற்செய்கையில் இவ்வாண்டு பாதிப்பு ஏற்படவில்லை

## முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் வரட்சிகாரணமாக எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்து காணப்படுவதுடன், நன்னீர் மீன்பிடி மற்றும் ஏனைய தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குளங்களில் நீர்மட்டங்களை வைத்து ஆயிரத்து 633.5 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைகள் நிறைவடைந்து வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரட்சி தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் தொடர்புகொண்டு வினவிய போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்து வரையான பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் ஆயிரத்து 235.7 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 397.8 ஹெக்டேயரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிர்ச்செய்கையின் போது வரட்சியினால் எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்த அவர், ஏனைய வரட்சியினால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, குடிநீர் தேவை காணப்படுகின்ற இடங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## 1.5 மில்லியன் ரூபா செலவில்

# கழிவுகளைக் கொட்டும் இடத்திற்கு பாதுகாப்பான சுற்றுமதில் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பிரதேச சபையினால் சேகரிப்படும் கழிவுகளை கொட்டும் பகுதியை பாதுகாப்பான பகுதியாக அமைக்கும் பொருட்டு 1.5 மில்லியன் ரூபா செலவில் இதற்கான சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை பாதுகாப்பாக கொட்டுவதற்கு மேற்படி சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பளைப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் திறந்த வெளி யில் கொட்டப்பட்டு வந்தமையால் இவ்வாறான கழிவுப் பொருட்களை உட்கொண்டு கால்நடைகள் உயிரிழந்த சம்பவங்களும் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில்இதற்கான சுற்றுமதில் 1.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் கருத்துத் தெரிவிக்கையில்,

கழிவு கொட்டப்படுகின்ற பகுதியை பாதுகாப்பான பகுதியாக மாற்றும் பொருட்டு பிரதேச சபையின் நிதியின் மூலம் 1.5 மில்லியன் ரூபா செலவில் குறித்த பகுதிக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# வவுனியாவில் மாவீரன் பண்டாரவன்னியன் விழா இன்று

(வவுனியா)

ஒல்லாந்தருடன் துணிச்சலுடன் எதிர்த்துப் போரிட்ட மாவீரன் பண்டார வன்னியனின் 215ஆவது ஞாபகார்த்த விழா வவுனியா நகர சபையின் நகரபிதா தேசபந்து இ.கௌதமன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் வவுனியா வில் கொண்டாடப்படவுள் ளது.

வவுனியாவில் அரச அதிபர் பணிமனைக்கு அருகில் உள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்தலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து தமிழ்மணி. அகளங்கன் சிலையருகில் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து வவுனியா கலாசார மண்டபத்தில் கொடியேற்றல், கொடிக்கீதம் இசைத்தலுடன் மங்கல விளக்கேற்றப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். ஆசிரியர் சுஜிதா சிற்றம்பலத்தின் மாணவர்கள் வழங்கும் வரவேற்பு நடனம் இடம்பெறும். தொடர்ந்து விருந்தினர்களை வரவேற்று நகர பிதா தேசபந்து. இ.கௌதமன் தலைமையுரையாற்றுவார்.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக ஜனாதிப திச் சட்டத்தரணி மு.சிற்றம்பலம் கலந்து கொள்வார். தொடர்பியல் வித்தகர். அருணா செல்லத்துரை பண்டாரவன்னியன் நினைவுப் பேருரையைவழங்குவார். தமிழருவி. த. சிவகுமாரன் சிறப்புரையாற்றவுள்ளார். வவுனியா கலைத் தொடர்பு மையத்தினர் "கவிஞர்களின் கவியளிக்கை" என்னும் நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில்எஸ். எஸ். வாசன், முல்லைத்தீபன்.ஐ. யோகநாதன், மாணிக்கம் ஜெகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வவுனியா கோயில்குளம் அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் "பன்றிப் பள்ளு" நாடகமும் இடம்பெறவுள்ளது. நகரசபை செயலாளர் இ.தயாபரன் நன்றியுரை வழங்குவார்.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், பிரதேச செயலர், மாவட்ட திணைக்கள தலைவர்கள், மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (2)

# விற்பனைக்கு தயாராக வைத்திருந்த 130 பக்கெற் கசிப்புடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு பகுதியில் கிடங்கு தோண்டி மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி விற்ப்பனைக்கு தயாராக வைத்திருந்த 130 பக்கெற் கசிப்புடன் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்டி சரத் சந்ரபாலவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நிலத்தின் கீழ் பதுக்கி விற்பனைக்கு தயாரான நிலையில் வைத்திருந்த 130 பக்கெற் கசிப்புடன் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சிறிய பக்கெற்று ஒவ்வொன்றும் நூறு ரூபாவிற்கு விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். (2-281)




# மாட்டைவெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்தவர்கள் கைதாகினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாடொன்றைக் கடத்தி வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்த ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

களிக்காடு பகுதியில் மாடு ஒன்றை கடத்தி கோடாலிக்கல்லு பகுதிக்குக் கொண்டு சென்று மாட்டை வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் விசாரணைக்கு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் இந்த சம்பவத்தின் பிரதான குற்றவாளி என கருதப்படுபவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஏனையவர்கள் இந்த விடயத்தின் சாட்சிகளாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களால் சிவில் வழக்கு மற்றும் கொள்ளை சம்பவம் தொடர்பில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் மல்லாவி பகுதியை சேர்ந்த இருவரை ஒட்டுசுட்டான் நகரப்பகுதி மற்றும் வித்யாபுரம் பகுதிகளில் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (2-281)

# விசுவமடு கிராம அலுவலர் பிரிவை இரு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும்

## பிரதேச மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு கிராம அலுவலர் பிரிவை இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விசுவமடு கிராம அலுவலர் பிரிவில் தற்போது 958 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு ஆயிரம் வரையான குடும்பங்களுக்கான தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிட்ட பிரதேச மக்கள் தமது பிரதேசத்திற்கு கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகள், பங்கீடு செய்வதிலும் பெரும் சிரமங்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது கிராம அலுவலர் பிரிவை இரண்டு பிரிவுகளாக பிரிப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்பிரதேச மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# யுவதி சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா சாம்பல் தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் யுவதியொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சாம்பல்தோட்டம் ஐயப்பர் வீதியில் வசிக்கின்ற வி.வித்தியா (வயது-22) என்ற யுவதியே தற்கொலை செய்துள்ளார்.

குறித்த யுவதி கொழும்பில் உள்ள ஆடை தொழிற்சாலைக்கு பணிக்கு செல்வதற்கு குடும்பத்தாரிடம் அனுமதி கோரியுள்ளார். கொழும்பு செல்வதற்கு குடும்பத்தினர் மறுத்த சமயத்தில் வீட்டின் அறையொன்றில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## மக்கள் நலன்காப்பகப்பணி

# முதல்வர் குழுத்தெரிவும் யாப்பு நிறைவேற்றலும்

(பனிக்கன்குளம்)

மக்கள் நலன் காப்பக பணி முதல்வர் குழு தெரிவும் யாப்பு நிறைவேற்றலும் கடந்த 20ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பக தலைமைப் பணிமனையில் மக்கள் நலன் காப்பக ஆலோசகர் வே சிவனடியார் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கில் நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தினால் பாதிப்படைந்த குடும்பங்களின் கல்வி, வாழ்வாதாரம்,சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி இந்த மக்கள் நலன் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

இந்த அமைப்பு மாவட்டங்கள் தோறும் தமக்கான குழுக்களை அமைத்து வடக்கு-கிழக்கின் எட்டு மாவட்டங் களில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்டு மக்கள் நலன் காப்பக தலை மைப் பணி மனையில்மக்கள் நலன் காப்பக ஆலோசகர் வே.சிவனடியார் தலைமையில் மக்கள் நலன் காப்பக பணி முதல்வர் குழு தெரிவு செய்யப்பட்டது.

அத்தோடு இந்த அமைப்பிற்கான யாப்பும் உருவாக்கப்பட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எட்டு மாவட்ட பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பல பெரியார்கள் மற்றும் இந்த அமைப்பின் கனடா நாட்டு பிரதிநிதியாக வை.உதயகுமாரியும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# கிளிநொச்சியில் நிலவுகின்ற வரட்சியினால் 33 ஆயிரம் குடும்பங்கள் கடுமையாகப் பாதிப்பு

# 9 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம்



## அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற வரட்சி நிலைமை காரணமாக சுமார் 33 ஆயித்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கடுமையான வரட்சி நிலை நிலவி வருகின்றது. இது தொடர்பில் நேற்றைய தினம் மாவட்ட அரச அதிபரிடம் இது இது தொடர்பில் வினவியு போது அவர் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மிக மோசமான வரட்சி இவ்வாண்டிலே வரலாற்றில் என்றுமில்லாதவாறு நிலவி வருகின்றது.

கடந்தாண்டு கூட போதிய நீர்வசதி இல்லாத போதும் மிகக் குறைந்தள வில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்த போதும் இந் தாண்டில் கூடுதலான பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியும் என்ற ஒரு நம்பிக்கை விவசாயிகளிடம் இருந்தது.

எமது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அறுபத்தைந்து வீதமான மக்கள் விவசாயத்திலேயே தங்கியுள்ளனர்.

எனவே இந்த நிலைமை காரணமாக மிக மோசமான ஒரு பாதிப்பே தற்போது காணப்படு கின்றது.

தற்போது குடிநீருக்கு கூட மிகவும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த அடிப்படையில் பிரதேச செயலாளர்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டதற்கு அமைய பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை என்பவற்றின் மூலம் சுமார் ஒன்பதாயிரத்து 500 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலமைகளை சமாளிக்கும் வகையில் இடர் முகாமைத்துவ அமைச்சினூடாக மேலதிக நிதிகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இது இவ்வாறிருக்க மாவட்டத்திலுள்ள கால் நடைகள் கூட தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

இங்குள்ள குளங்கள் நீர் நிலைகள் வற்றி வரண்டு வருவதனால் கால் நடைகளின் தண்ணீர்த்தேவை கருதி இரணைமடு மற்றும் ஏனைய குளங்களின் ஊடாக நீர் திறந்து விடப்பட்டுள்ளன.

தற்போது வரட்சியினால் பொதுவாக விவசாயம் ஒரு புறம், நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மறுபுறம், விவசாய நடவடிக்கைகளை நம்பியிருக்கும் தொழிலாளர்கள் இன்னொருபுறம். இவ்வாறு ஏறத்தாழ 33 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர் இந்த நிலைமை நீடிக்கும் போது தண்ணீர்த் தட்டுப்பாடு, வாழ்வாதார நிலைமைகள், நோய் பரவுதல் உள்ளிட்ட பாரதூரமான விளைவுகளை இந்த மாவட்டம் எதிர்கொள்கின்ற சூழலில் இதனை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# முகமாலையில் ஆபத்தான பகுதிகள் அடையாளம்; வெடிபொருட்களில் இருந்து மருந்துகள் அகற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலைப் பகுதியில் ஆபத்தான பகுதிகள் என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கின்ற ஆபத்தான வெடி பொருட்கள் அகற்றப்பட்டு அவற்றிலிருந்து வெடிமருந்துகள் பிரித்தெடுக்கப்பட்டு வருவதாக கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் எண்ணற்ற நிலக் கண்ணிவெடிகள் புதைக் கப்பட்டு ஓர் ஆபத்தான பகுதியாக தொடர்ந்தும் காணப்படு கின்றது.


இந்நிலையில் இந்தப் பிரதேசத்தில் பல தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் குறித்த பகுதியில் நீண்ட காலமாக ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய மிகவும் ஆபத்தான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அகற்றுவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றன.

வெடிபொருட்களை அகற்றும் போது பல பணியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு ஆபத்தான ஓர் பகுதியாகக் காணப்படுகின்ற இந்தப் பிரதேசத்தில் தினமும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முடித்துவிட்டு சென்று மறுநாள் பணிக்கு வருகின்ற போது அடையாளப் படுத்தப்பட்ட குறியீடுகள் அழிக்கப்படுவதுடன், அந்தப் பிரதேசங்களில் காணப்படுகின்ற வெடிபொருட்கள் எடுக்கப்பட்டு அதிலிருந்து வெடிமருந்துகள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தங்களுடைய பணிகளை முன்னெடுப்பதற்கு சிரமங்கள் காணப்படுவதாகவும் மேற்படி நிறுவனத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (2-315)

# 601 வேப்பம் தீராந்திகள் பொலிஸாரால் கைப்பற்று



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி கடத்தப்பட்ட 601 வேப்பம் தீராந்திகள் கைப்பற்றப்பட்டதுடன் கடத்திச் சென்ற நபர்கள் இருவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீதி காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மேற்படி மரங்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது அனுமதிப் பத்திரமின்றி மரத் தீராந்திகள் கடத்தப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைய வீதி பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்துக்கு முரணாகக் கொண்டு செல்லப்பட்ட 601 வேப்பம் தீராந்திகளைக் கைப்பற்றியதுடன் கடத்திச் சென்ற இருவரையும் கைது செய்ததோடு கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய மாங்குளம் பொலிஸார் கைது செய்யப்பட்ட நபர்களை முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய போது இரண்டு நபர்களுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் 29.11.2018 ஆம் திகதி வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ச்சியாக மாங்குளம் பொலிஸாரால் மரக்கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தடுக்கப்பட்டாலும் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

அந்தவகையில் அண்மையில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒரு, உழவு இயந்திரமும் சாரதியும் சட்ட முறைகளுக்கு முரணாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 15 உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டதோடு அவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதேவேளை இந்த சட்டவிரோத தொழில்களை நிறுத்துவதற்கு மக்கள் தமக்கு தகவல்களை வழங்கி உதவுமாறும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-281)

# ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபார நிலையங்களை திறப்பது உரிமையாளர்களின் முடிவு

## வர்த்தகர் நலன்புரிச் சங்கம் துண்டுப்பிரசுரம்

(குருமன்காடு)

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி வியாபார நிலைய உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வர்த்தகர் சங்கத்தினால் வியாபார நிலையங்களுக்கு அண்மையில் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வவுனியா வர்த்தகர் நலன்புரிச்சங்கத்தினால் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்று அரசாங்கத்தினாலோ தொழில் திணைக்களத்தினாலோ சட்டம் இல்லை. வியாபார நிலையங்களைத் திறப்பதும் பூட்டுவதும் வியாபார நிலைய உரிமையாளர்களின் உரிமை. அதில் எவ்வித தலையீடுகளும் செய்ய மாட்டோம் என்று தொழில் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளதாக துண்டுப்பிரசுரங்கள் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் மூடுவது தொடர்பாக தொழில் திணைக்கள ஆணையாளரை கடந்த 13 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினோம். ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் மூடுவதற்கு அரசாங்கத்தினாலோ அல்லது தொழில் திணைக்களத்தினாலோ சட்டம் எதுவும் இல்லை. வியாபார நிலையங்களைத் திறப்பதும் மூடுவதும் வியாபார நிலைய உரிமையாளர்களின் உரிமை. அதில் எவ்வித தலையீடுகளையும் செய்ய மாட்டோம் என்று தொழில் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் தொழில் புரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளையும் விடுமுறைகளையும் தொழில் திணைக்கள சட்டத்திற்கேற்ப நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பது தொழில் திணைக்களத்தின் ஆணையாளரின் வேண்டுகோள்.

ஆகையால் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் வசதிகளுக்கேற்பவும் ஊழியர்கள் பாதிக்கப்படாத வகையிலும் வாடிக்கையாளரின் தேவைகள் கருதியும் முடிவு எடுக்கலாம் என்று அத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டு வர்த்தகர் நலன்புரிச்சங்கம் உரிமைகோரி அத்துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# போதை மாத்திரைகளுடன் மூன்று பேர் கைது

(மன்னார்)

டெமடோல் எனப்படும் ஆயிரத்து 300 போதை மாத்திரைகளை இரு மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின் போது மன்னார் நகரத்தில் வைத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

வவுனியா பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் இருவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை ஸ்ரீபுர, ஹெலவெவ பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஹெரோயின் 41 கிராம் 600 மில்லிகிராமுடன் இரத்மலானை பகுதியில் வைத்து 29 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் பாணந்துறை, வேரவத்த பகுதியில் 2 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (2-7)

## திருக்குளிர்த்தி விஞ்ஞாபனம்



தெல்லிப்பழை சித்தியம் புளியடி என்றழைக்கப்படும் சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் பெருமான் தேவஸ்தானத்தின் ஆவணி திருக்குளிர்த்தி விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு விசேட அபிஷேகப் பூசையுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அண்ணமார் பெருமான் வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். (இ)

## இராமகிருஷ்ண மிஷன் சுவாமி யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த மஹராஜ் யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை உரும்பிராய் சந்திக்கு அருகிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் சுவாமிகளின் சத்சங்கம் இடம்பெறும். இரவு 8 மணிக்கு சந்நிதி கோவிலில் சுவாமிகள் அருளுரை ஆற்றவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறும் இந்து இளைஞர் மாநாட்டிலும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும் கந்தபுராண அருள்நெறி விழாவிலும் சுவாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கவுள்ளார் என யாழ். இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலைய இணைப்பாளர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். (இ-7)



## இலவச ஆங்கில கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவசமான விசேட ஆங்கிலக் கற்கை நெறிகள் எதிர்வரும் 03.09.2018 (திங்கள்) அன்று ஆரம்பமாகவுள்ளது. தகுதியான மாணவர்கள் தொழில்நுட்பவியல் கல்லூரியில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கற்கை நெறிகள்: Developing Career Skills ஆங்கில கற்கை-நெறி (முழு நேரம் 3 மாதங்கள்)

தகைமை: க.பொ.த.(சா/த) ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

Advancing Career Skills ஆங்கிலக் கற்கை நெறி- (முழு நேரம் 3 மாதங்கள்)

தகைமை: க.பொ.த. (சா/த) ஆங்கிலத்தில் திறமை (C) சித்தியுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களைக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தில் (021 221 2403) பெற்றுக்கொள்ளலாம். (இ-7)

## நீதிமன்ற பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

அரசுடைமையாக்கப்பட்டவையும் உரிமை கோரப்படாதவையுமான பொருட்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

01. ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியும். அத்துடன் பொருட்களின் உரிமையாளர் யாராவது இருப்பின் ஏலவிற்பனை ஆரம்பிப்பதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் தமது உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும்.

02. ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதுடன் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களின் மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப் பொருளின் ஏலவிற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

03. ஏலத்தில் விற்கப்படும் பொருட்களானவை உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

## நல்லூர் ஆலயச் சூழலில் தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகிறது.

இதில் இன்று நடைபெறும் இசைக்கச்சேரியில் பாட்டு- ஆரூரன் அருனந்தி, வயலின்- எஸ். தியாகரன், மிருதங்கம்-பி.திவ்வியரூப சர்மா, கெஞ்சிரா- நா.சிவசுந்தர சர்மா ஆகியோர் வழங்குவர். (இ)

## தெய்வீகத் தொடர் இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாசியுடன் நல்லூர் ஸ்சைவ மகா சபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, மாவை ஆஸ்தான வித்துவான், கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மா "பார்வதி தவம்" பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

## கந்தபுராண எழுச்சி விழாவில் 'வள்ளி திருமணம்' வில்லிசை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்துவருகிறது.

அந்தவகையில், பத்தாம் நாள் நிகழ்வுகள், இன்று சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறும்.

இதில் திருமதி.புஸ்பமலர் யோகநாதன் பண்ணிசைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக்குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களக் கணக்காளர் மா.கோ.காண்டீபன் தலைமையில், யாழ். பல்கலைக்கழக மேனாட் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக் கலந்து சிறப்பிக்க, சாவகச்சேரி மற்றும் கோப்பாய் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆன்மீகப் பிரசாரகர், சைவப்புலவர் க.கனகதுர்க்காவின் "வாழ்க சீர் அடியார்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினர் வழங்கும் "வள்ளி திருமணம்" வில்லிசை நிகழ்வும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். (இ-7)

## பேரானந்தராஜாவின் விசேட உரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள TCT சொர்ணாம்பிகை மண்டபத்தில் "தொற்றா நோய்களும் அதன் தாக்கங்களும்" எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி பேரானந்தராஜாவின் விசேட உரை இடம்பெறவுள்ளது. (இ-7)

## 'உதித்தனன் உலகம் உய்ய' சின்மயா மிஷனில் அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமிகோவில் மஹோற்சவ காலத்தில், யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால், மஞ்சத்திருவிழாவாகிய இன்று சனிக்கிழமை முதல், தினந்தோறும் மாலை 7.15 மணி முதல் 8 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மய ஞான வேல்ஆச்சிரமத்தில்நடைபெறும்.

இதில் இன்று "உதித்தனன் உலகம் உய்ய" என்ற தலைப்பில் அருளுரை இடம்பெறும். (இ-7)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று மஞ்சத் திருவிழா



### மஞ்சமதில் காட்சி தருவான்

நெஞ்சினிலே நிறைந்திருக்கும் கந்தவேளே
நேர்மையை நீதியை காணவில்லையே
மஞ்சு தவழ் வானுயர்ந்த கோபுரங்கள்
மாண்போடு திகழ்கின்ற நல்லூரில்
கொஞ்சு மொழி வள்ளி தெய்வயானையுடன்
கோலாகலமாக எழுந்தருளி வந்து
மஞ்சமதில் காட்சி தந்து அருள வேண்டும்
மாநிலத்தில் நேர்மை நீதி தழைத்திடவே.

ஏழாலை,
மு.இந்திராணி.

### மஞ்சத்தில் வருகவே

மஞ்சத்தில் நல்லூரான் எழுந்தருளிடவே
மனக்குறைகள் மெல்ல விலகிடவே
அலங்காரக் கந்தனவன் அருள் தரவே
அகிலம் என்றும் சிறந்திடவே.

ஆறுபடை வீடுடைய வேலவனே
அசுரர் படையழித்திட்ட நாயகனே
அற்புதங்கள் புரிந்திடும் கந்தனே
அடியவர்களுக்கருள மஞ்சத்தில் வருகவே.

அரியாலையூர்,
யசிதீபன்.

### நல்லைக் குமரப் "பா"

ஐயன் உன்னைக் கரம்பற்ற
அரிய தவத்தைப் புரிந்திட்ட
தையல் வள்ளிக் குறத்தியுடன்
சரச லீலை தான்காட்டி
மையல் கொண்டே மணஞ்செய்து
மன்றினி லேற்றி வைத்தவனே
நையு மடியார் நலங்காக்கும்
நாதா நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்



# முல்லையில் தென்னை மரங்களுக்கு இடையில் அன்னாசிச் செய்கையை ஊக்குவிக்க செயற்றிட்டம்

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் உகநாதன் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னை மரங்களுக்கு இடையில் அன்னாசிச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 0.2 மில்லியன் ரூபா செலவில் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மாகாண குறித்தொதுக்கப்பட்டநிதியின் கீழ் 27 வரையான செயற்றிட்டங்கள் 31.29 மில்லியன் ரூபாசெலவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்னை பயிர்ச்செய்கையில் ஊடுபயிராக அன்னாசிச் செய்கையை ஊக்குவிக்கும் வகையிலான திட்டம் 0.2 மில்லியன் ரூபா செலவில்முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒன்பது பயனாளிகளும் முத்துஐயன் கட்டு வலதுகரைப் பகுதியில் ஒரு பயனாளியும் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் தலா ஆயிரம் அன்னாசி உறிஞ்சிகள் வீதம் பத்தாயிரம் அன்னாசி உறிஞ்சிகள் வழங்கப்பட்டு அவை நடுகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# சட்டத்துக்கு முரணாக மாடுகளை கடத்திய மூவருக்கு பிணை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் 222 ஆவது கிலோமீற்றர் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி கடத்தப்பட்ட 14 மாடுகளை கைப்பற்றியதுடன் மூன்று நபர்களையும் சந்தேகத்தின் பேரில் மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 19ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் வீதி சுற்று காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மேற்படி மாடுகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரமின்றி மாடுகள் கடத்தப்படுவது கண்டறியப்பட்டுள்ளது

இதனடிப்படையில் மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வி.பி.ஜெபுஸ்பகுமாரவின் ஆலோசனைக்கமைய சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்துக்கு முரணாக கொண்டு செல்லப்பட்ட 14 மாடுகளை கைப்பற்றியதுடன் மாட்டைக் கடத்தி சென்ற மூவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததோடு மாடு கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய மாங்குளம் பொலிஸார் கைது செய்யப்பட்ட நபர்களை அன்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய போது மூன்று நபர்களுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் 27ஆம் திகதி வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (2-281)

# 'கடன்படாதே; தற்கொலை செய்துகொள்ளாதே' தற்கொலைக்கு எதிராக வவுனியாவில் விழிப்புணர்வு








(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிட்டம் வவுனியா பொலிஸ் நிலையம் மற்றும் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேசசபையினருடன் இணைந்து தற்கொலைக்கு எதிரான செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் ஒன்றிணைந்த ஆட்டோக்களுக்கு தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு வசனம் பொறிக்கப்பட்ட மனிதனை நம்பாதே தற்கொலை செய்யாதே" என்ற ஸ்டிக்கர்கள் ஒட்டி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் கடந்த ஆறு மாதங்களில் 30 பேருக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இன்னும் பலர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

எனவே இதனை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையாகவே ஆட்டோக்களில் பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இதனை ஆரம்பித்துள்ளதாக வவுனியா பதில் தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். குமாரசிங்கே தெரிவித்துள்ளார்.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி. எம். எஸ். எம். தென்னக்கோன் கலந்து கொண்டு ஆட்டோக்களில் ஸ்ரிக்கர்களை ஒட்டி செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவும் விழிப்புணர்வு பதாகை ஒன்று பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் கடன்படாதே, தற்கொலை செய்துகொள்ளாதே என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான பிஷப் பி. எம். இராஜசிங்கம் மற்றும் மதபோதர்கள், ஆட்டோச் சாரதிகள் சங்கத் தலைவ்ர், போக்குவரத்துப் பொலிஸார், எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# மாவீரன் பண்டார வன்னியனின் வெற்றி நினைவுநாள் முல்லையில் இன்று

(பனிக்கன்குளம்)

வன்னியின் இறுதி மாமன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 215 ஆவது ஆண்டு வெற்றி நினைவு நாள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கற்சிலைமடு பண்டாரவன்னியன் நினைவுச்சிலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பண்டாரவன்னியன் அறங்காவற்கழக தலைவர் இ.சந்திரரூபன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் அனைத்து மக்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் முல்லைத்தீவு மாவட்ட பண்டார வன்னியன் அறங்காவற் கழகத்தினர் கேட்டுள்ளனர். (2-281)

# கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் பதவிகளை தூக்கி எறிந்து விட்டு விமர்சியுங்கள்

## மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன் வேண்டுகோள்



(பனிக்கன்குளம்)

கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் உங்கள் பதவிகளை தூக்கி எறிந்துவிட்டு விமர்சியுங்கள். கூட்டமைப்பு தமிழர்களின் தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் விட்டுக்கொடுக்காதுஎன வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆண்டிஐயா புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு உடையார்கட்டு தெற்கில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் நிதியொதுக்கீட்டில் 2017 ஆம் ஆண்டின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் விசேட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேசிய கொள்கைகள் மற்றும்பொருளாதார அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் புனரமைக்கப்பட்ட பொது நூலக கட்டட திறப்பு நிகழ்வு உடையார்கட்டு தெற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ந.கிரியாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த நூல்நிலையத்திற்கான நிதி.எவ்வாறு வந்தது என்ற விடயம் பலருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் இந்த நிதிதான் கடந்த தேர்தல் காலத்தில் ஒரு பிரசாரமாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டது. கூட்டமைப்பு அந்த நிதியை பெற்று செய்தால் அது இலஞ்சம் அல்லது கையூட்டல் பெற்று செய்தார்கள் என்று கூறப்பட்டது.

அபிவிருத்தி என்ற போர்வையில் தேசிய கட்சிகள் தமிழ்மக்கள்ள கூறுபோடுகின்ற நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும். இவர்களுக்காக புல்லுருவிகளாக செயற்படுகின்றவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்த நாட்டிற்கு ஒரு ஜனாதிபதிதான் அதற்காக தமிழர்களின் தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் விட்டுக்கொடுக்கமுடியாது.

இவ்வாறானவர்கள் மக்களை திசை திருப்புகின்ற நடவடிக்கையில் தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்வாங்க மாட்டாது. உரிமைகளை பெற்றுக்கொடுக்க தொடர்ந்து போராடுவோம். கூட்டமைப்பு பிரிந்து செல்ல போகின்றது என்று மக்கள் கேட்கின்றார்கள். அவ்வாறு எல்லாம் நடக்காது. கூட்டமைப்பு தொடர்ந்து பயணிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# கணனி கற்கை நிலையத்திறப்பு விழா

(கிளிநொச்சி)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வன்னிநேயம் கணனி கற்கை நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை அருகாமையிலுள்ள வன்னிநேயம் கணனி கற்கை நிலையத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் கந்தையா சிதம்பரநாதன், சிறப்பு விருந்தினர்களாக கிளி/ ஆனைவிழுந்தான் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி மதி ச.ராவேஸ்வரன், கிளி/ ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை அதிபர் டேவிட் கிஸ்காட், கிளி/ வன்னேரி மகா வித்தியாலய அதிபர் ப.நடேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

உ


சிவமயம்

## மு/புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

# தேர்த் திருவிழா சிறப்பு மலர்

**25.08.2018**





**இலங்கைத் தீவின் வடபால் முல்லைத்தீவின் முத்தென விளங்கும் புதுக்குடியிருப்பில் வள்ளி தெய்வயானை சமேதராக வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வரும் ஞானவேலாயுதம் பெருமான் அழகிய சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் மழை பொழியும் இந்நாளில் கலியுக கடவுளாம் கந்தப் பெருமான் கருணைக் கடவுள் எம்பெருமான் ஆறுமுகப் பெருமான் தேர் ஏறி வந்து அடியார்கள் வினை தீர்த்து மகிழ்ச்சியுடன் அனைவரும் வாழ அருள் மழை பொழிய வேண்டுகின்றோம்.**

ஆலய பரிபாலனசபை

## மலர் சிறப்புற வாழ்த்துவோர்




















(சி-3624)



# நாட்டைச் சீரழிக்கும் ஆட்சியாளர்களிடமிருந்து உடன் மீட்க வேண்டும்

## தேசிய பிக்கு முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தை காரணம் காட்டியே வடக்கு மற்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் அரசியலை மேற்கொள்கின்றனர் எனக் குற்றம் சுமத்திய தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் வகமுல்ல உதித்த தேரர் நாட்டை சீரழிக்கும் ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டை உடனடியாக மீட்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

தேசிய பிக்குகள் தினத்தை நாளை 26 ஆம் திகதி நினைவுகூரவிருக்கும் புத்தசாசன பிக்குகள் அத்தினத்தை முன்னிட்டு இடம்பெறவிருக்கும் நிகழ்வுகள் குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் புத்தசாசன கலாசார மண்டபத்தில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டவர்களிடமிருந்து சுதந்திரமடைகையில் இலங்கைப் பிரஜையின் தனிநபர் கடன் தொகை 70 ரூபாவாக இருந்தது. ஆனால் இன்று இது 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. அரசியல்வாதிகள் அரசியல் துறையிலும் பொருளாதாரத்திலும் கண்ட தோல்வியே இந்நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

2017 வரவு-செலவு கணக்கின்படி ஆயிரத்து 800 மில்லியன் வருவாய் உள்ள இடத்தில் 2 ஆயிரத்து 500 மில்லியன் செலவு உள்ளது. இதன்படி 700 மில்லியன் துண்டுவிழும் தொகை. இந்த அதிகரித்த செலவீனத்தை சரிசெய்ய மேலும் மேலும் கடன் வாங்குகின்றோம்.

இவ்வாறு அடிக்கடி இலங்கைக்கு கடன் தர முன்வரும் நாடுகள் அவர்களின் அரசியல் நோக்குகளை எமது நாட்டின் நோக்காக மாற்றும் முயற்சிகளிலேயே ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதாரத்தை வளர்ச்சி காணச் செய்வதற்காக எமக்கென்று எதுவித தீர்மானங்களும் இல்லாமல் செயற்படுகின்றோம். இதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய அரசியல் தலைமைகள் யுத்தத்தை காரணம் காட்டி தங்களது சுயநல அரசியலை முன்கொண்டு செல்கின்றனர்.

இதற்காக நாட்டு மக்கள் மத்தியில் இனவாதம், மதவாதங்களை தோற்றுவித்து எம்மை தனித் தனிக் குழுக்களாக பிரித்துள்ளனர். இவ்வாறான அரசியல் நிலைப்பாட்டை மாற்றி நாம் ஒன்றிணைந்தால் ஒழிய நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்து எம்மால் சிந்திக்கவே முடியாது.

வெளிநாட்டவர்களிடமிருந்து நாட்டை மீட்கையில் இன, மத பிரிவினைகளின்றி நாட்டு மக்கள் என்ற ரீதி யிலேயே போராடினர். இந் நிலை மீண்டு வருமாயின் நாட்டை சீரழிக்கும் இந்த அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டை மீட்க முடியும்.

இல்லையாயின், இந்த சிங்கப்பூர், சீன, இந்திய, எட்கா போன்ற ஒப்பந்தங்களுக்கும் 19 ஆவது 20 ஆவது சீர்திருத்தங்களும் நாம் முகம்கொடுத்து சுயநல அரசியல்வாதிகளின் தீர்மானங்களையே எமது தீர்மானங்களாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டியேற்படும்.

சாதாரண தர, உயர் தரங்கள் கூட இல்லாத அரசியல் தலைமைகள் நாட்டின் வளர்ச்சி குறித்து சிந்திக்க மாட்டார்கள். எங்கு நாட்டை அடகு வைக்க முடியும் என்பது குறித்தே அவர்களது சிந்தனை காணப்படும்.

இப்படியான ஒரு அரசியல் கலாசாரத்தை முற்றாக மாற்றியமைக்க வேண்டும். வெளிநாட்டர்வகளிடமிருந்து நாட்டை மீட்டு விட்டோம். இந்த சுயநல அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டை மீட்க அணிதிரள்வோம் எனவும் உதித்த தேரர் கேட்டுக் கொண்டார். (இ-7)

### ஜப்பான் போர் விமானம் குண்டு வீசிய

# சீனக்குடா எண்ணெய்த் தாங்கியை ஜப்பான் அமைச்சர் பார்வையிட்டார்



(கொழும்பு)

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியப் போர் விமானம் ஒன்றினால் தாக்கி அழிக்கப்பட்ட திருகோணமலை சீனக் குடாவில் உள்ள எண்ணெய்த் தாங்கியை ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா கடந்த 22 ஆம் திகதி திருகோணமலைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவர், சீனக்குடாவில் உள்ள பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட எண்ணெய்த் தாங்கிகளையும் பார்வையிட்டார்.

இலங்கை பிரித்தானியர் ஆட்சியில் இருந்த போது இரண்டாம் உலகப் போரில் பங்கெடுத்த ஜப்பானியப் போர் விமானங்கள், திருகோணமலை துறைமுகத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியிருந்தன.

1942 ஏப்ரல் 9 ஆம் திகதி நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலின் போது ஜப்பானிய விமானப்படையின் போர் விமானம் ஒன்று சீனக்குடா எண்ணெய்த்தாங்கி ஒன்றின் மீது மோதி வெடித்தது.

கமிகாசி எனப்படும் ஜப்பானிய விமானப்படையின் தற்கொலைப்படை விமானி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தார்.

இந்தத் தாக்குதலை அடுத்து சீனக்குடா எண்ணெய்த் தாங்கியில் பற்றிய தீ ஏழு நாட்களாக எரிந்து கொண்டிருந்தது.

தற்போதும் அழிந்த நிலையில் காணப்படும் அந்த எண்ணெய்த்தாங்கியையே ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இந்த இடத்தைப் பார்வையிட்ட ஜப்பானின் உயர்மட்டத் தலைவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டு மக்களின் வருமானத்திற்கு பொருத்தமான மதுபானம் தேவை

## வாசுதேவ எம்.பி.கோருகிறார்



(கொழும்பு)

நாட்டு மக்களின் வருமானத்திற்கு பொருத்தமான மற்றும் உடல் நலத்திற்கும் ஏதுவான மதுபான வகை இருக்க வேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மதுபானங்கள் இருந்தால், மக்கள் கேரளக் கஞ்சா போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையாவது குறையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபானம், போதை என்பது சிலரது பழக்கம் என்பதால், அதனை எதிர்ப்பதோ அல்லது சட்டத்தை அமுல்படுத்துவதோ முடியாத ஒன்று எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மதுவரி திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம் பலவீனங்கள் நமக்குத் தெரிய வேண்டாமா?

நூற்றுக்குத் தொண்ணூறு மனிதர்களுக்குத் தங்களுடைய பலவீனங்கள் என்ன என்பதே தெரியாது.

நாம் குறைபாடு உடையவர்கள் என்கிற கோணத்தில் சிந்திக்கவே நம்மவர்கள் தயங்குகிறார்கள். எனவே,பலவீனங்களைத் தெரிந்து வைத்துக்கொண்டு அவற்றை வெல்ல வேண்டும் என்று இவர்கள் எண்ணுவதே இல்லை.

"எனக்குப் பய உணர்ச்சி அதிகம்; நான் எதற்கெடுத்தாலும் கவலைப்படுகிறேன்; நான் பாராட்டுக்கு மயங்குகிறேன்; எனக்குத் தேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் கோபம் வருகிறது" என்றெல்லாம் ஒருவர் பட்டியலிட்டால், இந்தப் பட்டியிலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. ஆமாம், இவை அனைத்துமே மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவருக்கும் இருந்தே தீரும்.

இந்தப் பலவீனங்களெல்லாம் அதிகமாகும் போதுதான் ஒருமனிதன் வாழ்வில் தோற்றுப் போகிறான்.

பலவீனங்களை வெல்வது எப்படி?

முதல் கட்டமாக நமக்கு இந்தப் பலவீனம் இருக்கிறது என்பதை மனசாட்சியளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டும். ஆயிற்றா? சரி, இனி அடுத்த கட்டம் அவற்றை வெல்ல வேண்டும்; எப்படியாவது வெல்ல வேண்டும்; வென்றே தீர வேண்டும்; விரைவில் வென்று காண்பிக்கிறேன் என்றெல்லாம் மனத்திற்கு படிப்படியாக உறுதி பூண வேண்டும்.

நம் வட்டத்தில் இந்தப் பலவீனங்களை வென்றவர்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்களிடம் பேச வேண்டும். அவர்கள் சொல்லும் அறிவுரைகளை-யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நம்மோடு பழகும் தனி மனிதர்களை இப்படிச் சந்திக்க விரும்பாவிட்டால், மகான்களை நாடலாம்.

இத்துறையில் வல்லவர்கள் எழுதிய நூலைப் படிக்கலாம். படிப்பது என்றால் கையில் பேனாவுடன் படிக்க வேண்டும். முக்கிய வரிகளை அடிக்கோடிட்டபடி படிக்க வேண்டும். அந்தப் பலவீனம் தலைதூக்கும் போதெல்லாம் அடிக்கோடிட்ட வரிகளை மட்டும் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். இதைச் செய்து வந்தால் நம்மிடத்தில் அபரிமிதமான மாற்றங்கள் ஏற்படும்.

பலவீனங்கள் உள்ளவர்கள் இன்னொரு முக்கியமான காரியம் செய்ய வேண்டும். என் பலவீனங்கள் எவையென பட்டியலிட்டு எல்லோரிடமும் நீட்டிக் கொண்டிருப்பதை உடனே நிறுத்த வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# S.V. முருகேசு

அடியார்கள் வினை தீர்க்கும் சந்நிதி கந்தன்...
தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.





## 28 துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸின் நிதி யொதுக்கீட்டில் முதற்கட்டமாக 28 பேருக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (இ-17)

## முஸ்லிம் மக்கள் ஒன்றுகூடல் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் ஒன்றுகூடல் இரண்டாம் நாள் கௌரவிப்பு அமர்வு இன்று பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் பேரவை தலைவர் எம்.யூ. எம். தாகிர் தலைமையில் நடைபெறும். இதில் விசேட விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, அ.பரஞ்சோதி, பா.கஜதீபன், தவநாதன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவர். (இ-9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



## V CHILLI POWDER மிளகாய்த்தூள்

சுத்தமான முறையில் தரமாக யாழ்ப்பாண பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட மிளகாய்த்தூள்.

சைவ, அசைவ உணவுகளுக்கு ஏற்றபடி
தயாரித்துக் கொடுக்கப்படும்.

**Home Delivery Available**

வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் பிரத்தியேகமாக பொதி செய்தும் கொடுக்கப்படும்.

விதானை வளவு
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

V Darling Sweets
TP No:- 077 944 7977,
077 508 4685


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
**அன்னக்கண்டு கந்தசாமி**

கடந்த 25.07.2018 அன்று
சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்
அமரர் அன்னக்கண்டு கந்தசாமி
அவர்களின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனை 25.08.2018
இன்று சனிக்கிழமை
அதிகாலை 4.00 மணியளவில்
வீட்டில் கிரியைகள் நடைபெற்று
கீரிமலை புனிதத்
தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் 11.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்மார்
நிர்மலானந்தம்-(ஆனந்தன்),
சச்சிதானந்தம்-(சின்னது), அமுதவாசன்-(செல்வன்)
தொ.இல: 021 205 5617,077 749 8439.

மயிலியதனை,
தொண்டைமானாறு.

## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம் முதலாம் அரையாண்டு பரீட்சைகள் 2017

- மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 27.09.2018 ஆம் திகதி முதல் 30.09.2018 ஆம் திகதி வரை நடைபெறும்.
- மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 27.08.2018 ஆம் திகதி முதல் 31.08.2018 ஆம் திகதி வரை கல்வியியல் துறை அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.
- பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை கல்வியியல் துறை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(த-3623)

# தேரேறி வருகிறான் ஆற்றங்கரை வேலன்

ஈழத்திருநாட்டின் கண்ணமது பூர்வீகத்தையும் பாரம்பரியங்களையும் அடையாளப்படுத்துகின்ற வணக்கஸ்தலம் செல்வச்சந்நிதியாகும். கடவுளர்கள் உறைந்தருளுகின்ற இடங்களெல்லாம் சந்நிதி என்று சொல்லப்படுகின்ற போதிலும், கடவுளருக்கும் அடியவருக்குமான உறவின் இறுக்கமான பிணைப்புக் காரணமாக இவ் ஆலயம் செல்வச்சந்நிதியென்று காலங்காலமாக அழைக்கப்பட்டு வருகின்றது. அடியவர்கள் மெய் உருகி வேண்டுவதும் அழுது புலம்பி மன்றாடுவதும் தெய்வத்துடன் உரையாடிநிற்பதுவும் உரிமை கொண்டாடி மகிழ்வதும் எம்பெருமானிடத்தில் தினமும் நிகழப்பெறும் விடயங்களாகும்.



"வேலே வருக தேரேறி வந்து திருவருளைத் தருக
வினை தீர்க்கும் வேந்தே வருக ஆற்றங்கரைத் தேவே வருக
மயிலேறும் மன்னா வருக அமுதமளிக்கும் அரசே வருக
அடியார்கள் திருவாழ்வே வருக சந்நிதிச் செல்வனே வருகவே"

இவ்வாறு அடியவர்களுடன் மிகவும் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருக்கும் சந்நிதி வேற்பெருமான் வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் வள்ளலாக இன்று திருத்தேரேறி வருகிறான். இவ்வேளையில் இதுவரை நாங்கள் அனுபவித்து வருகின்ற துயரங்கள், துன்பங்கள் யாவும் எம்மை விட்டகன்று செல்லவும் தன்னிகரில்லாத் தனித்துவம் மிக்க வாழ்க்கை முறைகள் இந்த மண்ணிலே மீண்டும் செழிக்கவும் எம்பெருமான் செல்வச் சந்நிதி வேலவனை மெய் உருகி வேண்டுவோமாக.

துரை கணேசமூர்த்தி

# எல்லை நிர்ணய அறிக்கையால் அரசாங்கத்துக்குள் முரண்பாடு

### கூட்டு எதிரணி தலைவர் தினேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சிகளிடையே எந்தவிதமான ஒருமித்த தீர்மானமும் இன்றியே பாராளுமன்றத்தில் அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளமை, அரசாங்கத்தின் உறுதியற்ற நிலைப்பாட்டையே எடுத்துக் காட்டுவதாக கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டமும் எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதா? இல்லையா? என்பதில் எந்த வித தீர்மானமும் இன்றியே நிறைவடைந்தது.

இதற்குக் காரணம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஒருமித்த உடன்பாடு காணப்படாமையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழ்.முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி நேற்று ஆரம்பம்















"யாழ் முயற்சியாளர் - 2018" உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனைக் கண்காட்சி நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகியது. இந்த கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். யாழ்.மாவட்ட சிறுதொழில் முயற்சியாளரின் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கிலும் அதற்கான சந்தைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் யாழ்.மாவட்ட செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சி இன்றும் நாளையும் முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது. இந்த கண்காட் சியின் ஆரம்ப நிகழ்வில் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ். முரளிதரன், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் தலைமை அலுவலக அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# தனியார் வைத்தியசாலைகளின் விலைக்கட்டுப்பாடு அடுத்தவாரம்

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளின் விலை கட்டுப்பாட்டை அடுத்த வாரம்செய்வதாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சத்திரசிகிச்சை, ஆய்வு கூட பரிசோதனைகள், குழந்தை பிரசவம் உள்ளிட்ட 53 வகையான கட்டணங்கள் இதன் மூலம் கட்டுப்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

தனியார் வைத்தியசாலைகளின் விலைக் கட்டுப்பாடு தொடர்பான இறுதிப்பட்டியலை தயாரிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் இரு தினங்களில் குறித்த அறிக்கை அமைச்சருக்கு கையளிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், அந்த கட்டுப்பாட்டு விலைப் பட்டியல் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய ஹிட்லரை ஆட்சிக்குக் கொண்டுவர பாதெனிய ஒத்துழைப்பு- மங்கள காட்டம்

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் அநுருத்த பாதெனிய சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஊடகவியலாளரை அச்சுறுத்தியமை தொடர்பில் நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

பாதெனிய அவருடைய செயற்பாடுகளால் 'பாப்பதெனிய' போன்று (பாவம் செய்பவர்) இருப்பதாகவும், புதிய ஹிட்லரை நாட்டில் ஆட்சிக்குக் கொண்டுவர அவர் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் மங்கள குற்றஞ்சாட்டினார்.

அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச் சட்டமூலம் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கல்ந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மங்கள சமரவீர இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

பாதெனியவின் செயற்பாடுகள் ஹிட்லர் அல்லது தலிபான்களின் செயுற்பாடுகள் போலவே இருக்கின்றன.

சண்டே ஒப்சேவர் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி தொடர்பாக தொலைபேசி மூலம் கருத்தை அறிவதற்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். இதன்போது எந்தவொரு நபரையும் மூளை பாதிக்கப்பட்டவர் என்பதை தம்மால் முறையாக நிரூபிக்க முடியும் எனக் கூறியுள்ளார். தலிபான்கள் அல்லது ஹிட்லர் ஆட்சியில் இவ்வாறான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இலங்கையில் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படாது. ஹிட்லர்களை ஆட்சிக்குக் கொண்டுவர முயற்சிக்கும் குழுவில் பாதெனியவும் இருப்பது தற்பொழுது புலனாகியுள்ளது என மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

27



தேவநம்பிய தீசனால் அநுராதபுரத்தில் கட்டப்பட்ட தூபராம விகாரை

" முதலில் அநுராதபுர இராச்சிய த்தில் தமிழர்களின் பங்களிப்பு எந்தளவுக்கு இருந்திருக்கின்றது என்று நோக்குவது முக்கியமானது. காரணம் ஏற்கனவே அநுராதபுர இராச்சியம் தனியே சிங்கள இனக் குழுவினால் மட்டும் ஆட்சி செய்யப்படவில்லை என்றும், தமிழ் மன் னர்களும் அவ் ஆட்சி அதிகாரங் களில் நீண்டகாலம் இருந்து ஆட்சி செய்திருக்கின்றார்கள் என்றும் கூறப்பட்டது. "

முதலாவது, தொண்டை மண்டலத்தில் எழுச்சிபெற்று, வளர்ச்சியுற்ற பல்லவப் பேரரசு, மற்றையது, மதுரையை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்ற பாண்டியப் பேரரசாகும். இந்த இரண்டு அரசுகளும் தங்கள் ஆட்சியின்போது இலங்கைக்குப் படையெடுத்த நிகழ்வுகள் இடம்பெறுவதை வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

இதன் விளைவாக, இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்று நிகழ்வுகள் தொடர்பாக சில செய்திகளை அக்காலத்து ஆதாரங்கள் காட்டுகின்றன. மேலும், பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சிகள், மொழி, கலை, கலாசார மேம்பாடுகள், வர்த்தக பொருளாதார நடவடிக்கைகள், நீர்ப்பாசன தொழில்நுட்ப அபிவிருத்திகள் என்பனவும் இலங்கைத் தமிழரின் சமயம், மொழி, கலை, கலாசார, பொருளாதார, தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் பெரும் மாற்றத்தையும், நிலையான தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தமையை மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

இவ்வாறான மாற்றங்களும், நிலையான தாக்கங்களும் அடுத்து வருகின்ற கி.பி.900 தொடக்கம் கி.பி.1200 வரை தென்னிந்தியாவில் எழுச்சிபெற்று, தஞ்சை மாவட்டத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழப் பேரரசின் ஆட்சிக்காலத்தில், அவர்கள் இலங்கைமேல் மேற்கொண்ட ஆதிக்கப்படர்ச்சியின் வெற்றிக்கு நல்லதொரு அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தமையையும் வரலாறு காட்டி நிற்கின்றது.

இந்த ஒரு பின்னணியை வைத்துக் கொண்டு, இதுவரை கிடைக்கப்பெற்ற, கல்வெட்டு ஆதாரங்கள், தொல்பொருட்கள், இலக்கிய ஆதாரங்கள், பிறநாட்டுக் குறிப்புகள் ஊடாக மேற்கூறப்பட்ட காலப் பகுதியிலான தமிழர் வரலாறு பற்றி நோக்குவது மிகப் பொருத்தமாகும்.

ஏற்கனவே முதலாவது அத்தியாயத்தில் கூறப்பட்டதுபோல், ஆதி வரலாற்றுக் காலத்தில் அநுராதபுர இராச்சியத்தின் எழுச்சி, ஏற்கனவே வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளில் ஆதிகாலத்தில் இருந்து எழுச்சி பெற்ற தமிழ்ச் சிற்றரசுகளை முக்கியத்துவம் இழக்கச் செய்திருந்தன எனப் பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுவது வழக்கம். கி.மு 300- கி.பி.300க்கு இடைப்பட்ட காலத்தில் மேற்படி நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன எனவும் கூறப்பட்டது.

இவ்வாறான தமிழ்ச் சிற்றரசுகள் முக்கியத்துவம் இழந்து காணப்பட்டன என்ற கூற்றுக்கு அடிப்படைக் காரணம், போதியளவு வரலாற்று ஆதாரங்கள் காணப்படாமையினாலேயே என்று கொள்வதில் தவறு இருக்க முடி

## ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

யாது. கூடவே, அச் சிற்றரசுகள் அவ்வாறு முக்கியத்துவம் இழந்து காணப்பட்டன என்ற முடிவுக்கு வருவதும் தவறானதாகும்.

காரணம் கி.பி.300களைத் தொடர்ந்து வருகின்ற காலப்பகுதிகளில், குறிப்பாக கி.பி.600 களிலிருந்து, நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை, கிடைக்கப் பெறுகின்ற ஆதாரங்கள் ஊடாக நோக்குகின்ற பொழுது, மேற்படி பிரதேசங்களிலும், அநுராதபுரம் போன்ற வேறு பிரதேசங்களிலும் தமிழர் ஆதிக்கமும் செல்வாக்கும் தொடர்ச்சியாகவும் வலுவாகவும் வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருந்திருக்கின்றன என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

முதலில் அநுராதபுர இராச்சியத்தில் தமிழர்களின் பங்களிப்பு எந்தளவுக்கு இருந்திருக்கின்றது என்று நோக்குவது முக்கியமானது.

காரணம் ஏற்கனவே அநுராதபுர இராச்சியம் தனியே சிங்கள இனக் குழுவினால் மட்டும் ஆட்சி செய்யப்படவில்லை என்றும், தமிழ் மன்னர்களும் அவ் ஆட்சி அதிகாரங்களில் நீண்டகாலம் இருந்து ஆட்சி செய்திருக்கின்றார்கள் என்றும் கூறப்பட்டது.

அதேபோன்று கி.பி 300களுக்குப் பின்னரும், தமிழ் மன்னர்களுடைய செல்வாக்கும், ஆதிக்கமும், உயர் குழாத்தினரான தமிழர்கள், இந்து, சைவப் பிராமணர்கள், வர்த்தகர்கள், கட்டடவியலாளர்கள் என்போரின் செல்வாக்கும் தொடர்ந்து அநுராத இராச்சியத்தில் இருந்திருக்கின்றன.

தமிழர்களின் அரசியல் நிலைமையை நோக்கும் பொழுது, அநுராதபுர இராச்சிய மன்னனாக, கி.பி 406இல் மஹாநம என்ற சிங்கள மன்னன் பதவி ஏற்றதாகப் பாளி நூல்கள் கூறுகின்றன. அம் மன்னனுடைய அரசியருள் ஒருவராக தமிழ்ப் பெண் ஒருவர் வரலாற்றில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

அப் பெண்ணரசி மிகுந்த அரசியல் செல்வாக்கு உள்ளவளாகக் காணப்பட்டிருக்கின்றாள். காரணம், மஹாநாம மன்னன் கி.பி 428இல் இறந்தபோது, அத்தமிழ் அரசியின் மகன் சொத்திஸேனனின் என்பவன் அரசனாக முடிசூடிக்கொள்கின்றான்.

சொத்திஸேனனின் மறைவுக்குப் பின் பண்டு என்ற இன்னொரு தமிழ் மன்னன் கி.பி.429 அளவில் ஆட்சியைக் கைப்பற்றி அநுராதபுரத்தை ஆண்டதாகப் பாளி வரலாற்று நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. மேற்கூறப்பட்ட தமிழ் அரசியும், பண்டு என்ற மன்னனும் பாண்டிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனவும் பாளிநூல்கள் கூறுகின்றன. பண்டு என்ற பெயர், பாளி மொழி யில் பாண்டியரைக் குறிப்பதால் பாளி நூல்கள் அவ்வாறான ஒரு முடிவுக்கு வந்துள்ளதைக் காண முடிகிறது.

பாளி, சிங்கள நூல்களின் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் வரலாற்று நிகழ்வுகளைக் கூறும்போதெல்லாம், ஏதோ வகையில் அவர்களைத் தென்னிந்தியாவோடும், குறிப்பாகத் தமிழ்நாட்டோடும் தொடர்புபடுத்தி அவர்களை அந்நியராகக் காட்ட முற்படுவது இலங்கை வரலாற்று மரபாக இருந்து வந்திருக்கின்றதென்பது முன்னுள்ள அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டது.

அதற்கான அடிப்படைக் காரணம், அந்நூலாசிரியர்களுக்கு, இலங்கை பூர்வீக மக்களின் வரலாற்றுக்கு முந்தியகால பரிணாம வளர்ச்சி பற்றிய விஞ்ஞானரீதியான அறிவு இருந்திருக்கவில்லை என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது. அத்தோடு, பௌத்தமதம் சார்ந்த, சிங்கள இனம் சார்ந்த குறுகிய உணர்வுகளுக்கு அந் நூலாசிரியர்கள் தம்மை உட்படுத்திய ஒரு வெளிப்பாடாக பாளி இலக்கியங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளமையும் இன்னொரு காரணமாகக் கொள்ளலாம்.

இதற்குச் சிறந்த உதாரணம், ஆரம்ப அநுராதபுர அரசில் 44 ஆண்டுகள் நல்லாட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன், தமிழ்நாட்டில் இருந்துவந்த சோழ பரம்பரையைச் சேர்ந்தவன் என்று மகாவம்சம் கூறுவதையும், மகாவம்சத்தின் மூல நூலாகிய தீபவம்சம் அவ்வாறு கூறவில்லை என்பதையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

மேலும் இலங்கையிலுள்ள புராதனகால அரசர்களின் பெயர்களையோ, மத்தியகால, நவீனகாலப் பெயர்களையோ ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் பயன்படுத்திய பெயர்களையோ இலங்கையில் உள்ள தமிழர்களும் பொதுவாகப் பயன்படுத்துவதைக் காணலாம். ஊர்பெயர்கள் கூட அவ்வாறாகத்தான் பெரும்பாலும் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்கள் பொதுவான இனத்துவ, சமய, கலை, கலாசார, பாரம்பரிய, மொழி அடிப்படையில் தென்னிந்திய, குறிப்பாகத் தமிழ்நாட்டுத் தமிழர்களோடு, வரலாற்றுக்கு முந்திய, ஆரம்ப மனித பரிணாம வளர்ச்சிக் காலத்திலிருந்து ஒன்றுபட்டவர்கள்.

புவியியல் ரீதியாகவும் நெருங்கிய இணைப்பை உடையவர்கள். எனவே இரண்டு பிரதேச மக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது பொருத்தமற்ற ஒரு விதிமுறையாகும்.

(தொடரும்)

# வவுனியாவில் ஆறு மாதத்திற்குள் 30 இற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை

## வவுனியா பொலிஸ் நிலைய பிரதிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆறு மாத பகுதிக்குள் 30இற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துள்ளதாக நேற்று முன்தினம் வவுனியா பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்டோக்களில் ஸ்டிக்கர் ஒட்டும் விழிப்புணர்வு நிகழ்வின் போது வவுனியா பொலிஸ் நிலையத்தின் பிரதி பொலிஸ் பொறுப்பதிகாரி குமாரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த சில மாதங்களில் தற்கொலை செய்வது அதிகரித்து காணப்படுகின்றது. இந்த தற்கொலை செய்வதைத் தடுத்து நிறுத்தும் முகமாகவே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு "மனிதனை நம்பாதே தற்கொலை செய்யாதே" என்ற வாசகம் அடங்கிய ஸ்டிக்கரை ஆட்டோக்களில் ஒட்டியுள்ளோம்.

வவுனியா பிரதேசத்தில் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 30இற்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துள்ளனர். இதில் அதிகளவானவர்கள் தூக்கில் தொங்கியே தற்கொலை செய்துள்ளனர்.

தற்கொலையை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எனவே ஆட்டோக்களில் ஆரம்பகட்டமாக தற்கொலையை தடுக்கும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டுகின்றோம் என தெரிவித்தார். (2-250)

மாணவியை கடத்தி பாலியல் துஷ்பிரயோகம்

# இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட இருவருக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

உடையார்கட்டில் பாடசாலை மாணவின்ய வாகனத்தில் கடத்தி சென்று விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த கிளிநொச்சி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட இரு நபர்களையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 9 ஆம் மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சை எழுதிவரும்லூத்மாதா கோவில் பகுதியில் வசித்துவரும் 19 வயது மாணவியை பளையைச் சேர்ந்த 22 வயதுடைய கிளிநொச்சி இள்ளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினால் கடந்த 20ஆம் திகதி பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியை ஊர்தி ஒன்றில் கடத்தி சென்று பளைப்பகுதியில் தென்னந்தோட்டம் ஒன்றில் வைத்து விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு மறுநாள் உடையார்கட்டுப்பகுதியில் கொண்டு வந்து இறக்கிவிட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பில் மாணவியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் பாதிக்கப்பட்ட மாணவியிடம் மேற்கொண்ட விசாரணையை தொடர்ந்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பளைப்பகுதிக்கு சென்று மாணவி கடத்தலுக்கு உதவிய நபர் ஒருவரை கடந்த 21ஆம் திகதி பிற்பகல் கைது செய்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து கடந்த 21ஆம் திகதி இரவு பளைப்பகுதிக்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த மாணவியை கடத்தி விருப்பத்திற்கு மாறாக பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட பளை பகுதியினை சேர்ந்த 22 வயதுடைய கிளிநொச்சி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்துள்ளார்கள்.

பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்த வேளை குறித்த கடத்தலுக்கு உதவிய இளைஞனை கடந்த 22ஆம் திகதி பதில் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் மாணவியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் கிளிநொச்சி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் 23ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். இவரை 04.09.18 அன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி பணித்துள்ளார். குறித்த பாலியல் துஷ்பிரயோக வழக்கு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக தெரிவித்துள்ளார்கள். (2-281)

# மகாவலி அதிகார சபையினால் காணி உத்தரவு பத்திரங்கள்

## தமிழ்மக்கள் மீள்குடியேறாத காணிகள் அளவீடு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பகுதிக்கு தெற்கு பக்கத்தில் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய தமிழ் கிராமங்களில் அத்துமீறி குடியேறிய சிங்கள மீனவர்களுக்கு அங்கு நிரந்தரமாக தங்கியிருந்து தொழில் செய்வதற்கான காணி உத்தரவுப் பத்திரங்களை மகாவலி அதிகாரசபை வழங்கியுள்ளது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

சாதகமான முடிவுகளை அரசு வழங்காமையால் நில அபகரிப்புக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கப் போவதாக மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மீனவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் நிலையில் இரு சிங்கள மீனவர்களுக்கு எதிராக கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் ஊடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கின் தீர்ப்பில் மேற்படி சிங்கள மீனவர்கள் தமிழ் மக்களின் நிலத்திலிருந்து வெளியேற வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் மகாவலி அதிகாரசபை மேற்படி மீனவர்களையும் சேர்த்து 8 பேருக்கு கொக்கிளாய், கருநாட்டுக் கேணி, கொக்குதொடுவாய் ஆகிய கிராமங்களில் நிரந்தரமாக தங்கியிருந்து கடற்றொழில் செய்வதற்கான காணி உத்தரவுப் பத்திரங்களை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்றம் சிங்கள மீனவர்கள் ஆக்கிரமித்துள்ள காணியில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என தீர்ப்பளித்திருக்கும் நிலையில் அதனை மீறி மகாவலி அதிகாரசபை காணி உத்தரவுப் பத்திரங்களை வழங்கியமை ஊடாக இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை எதேச்சதிகாரமாக மீறும் அளவுக்கு மகாவலி அதிகாரசபைக்கு அதிகாரம் உள்ளதா? என முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், மகாவலி அதிகாரசபை கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி ஆகிய கிராமங்களில் தமிழ் மக்கள் மீள்குடியேறாத காணிகளை மகாவலி அதிகாரசபை தற்போது அளவீடு செய்து வருகின்றது.

இதனால் அந்த காணிகளிலும் சிங்கள மக்கள் விரைவில் குடியேற்றப்படலாம் என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதனை விட இந்த விடயம் உள்ளிட்ட தமிழ் மக்களது நிலங்கள் பல்வேறு திணைக்களங்களால் அபகரிப்பு தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்தும் அண்மையில் தெளிவுபடுத்தினர். இருந்தும் சாதகமான முடிவுகளை அரசு வழங்காமையினால் நில அபகரிப்புக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கப் போவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (2-281)




# தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகளில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தீவிரம்

## சார்ள்ஸ் எம்.பி.காட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் அடாவடித்தனங்கள் மற்றும் அட்டூழியங்களினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எடுத்துரைப்பதற்கு நேரமொன்றை பெற்று தருமாறு கோரியபோதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமக்கு நேரம் ஒதுக்க மறுத்துவிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். எனவே அடுத்து வரும் தேர்தல்களின் போதும் தமிழ் மக்களே தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பார்கள் என்பதனை ஜனாதிபதியும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி திட்டத்தின் ஊடாக ஒரு துளி நீர் கூட 1988 ஆம் ஆண்டும் முதல் இன்று வரைக்கும் முல்லைதீவு , வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு வரவில்லை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை. எனினும் மகாவலி திட்டத்தை வைத்து இவ்விரு மாவட்டங்களில் புதிய குடியேற்றங்களையே மகாவலி அபிவிருத்தி அதிகாரம் கொண்டு வந்துள்ளது.



இந்த திட்டத்தில் காணி உறுதிப்பத்திரங்கள் கூட வழங்கப்படவில்லை. ஆனால் சிங்களவர்களுக்கு மாத்திரம் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஆகவே மகாவலி அபிவிருத்தி அதிகார சபை சிங்களவர்களுக்கு மாத்திரம் உரியதா?. முல்லைத்தீவு பிரதேச செயலக பிரிவொன்றில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சிங்களவர்களை வெளியேறுமாறு கூறியபோதும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அந்த சிங்கள மக்களுக்கு காணி உறுதிப்பத்திரத்தை வழங்கியுள்ளது.

தமிழர்களின் பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் மீதே மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தீவிரமாக ஆர்வம் காட்டி வருகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். எனவே அடுத்து வரும் தேர்தல்களின் போதும் தமிழ் மக்களே தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பார்கள் என்பதனை ஜனாதிபதியும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறவில்லை. தமிழ் மக்களே தீர்மானம் எடுத்து வாக்களித்தனர். ஆனால் தற்போது தமிழ் மக்கள் விரக்தியில் உள்ளதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (2-7)

# இலங்கை அகதி உள்ளிட்ட மூவர் மீது பாய்ந்தது குண்டர் தடுப்புச் சட்டம்

(கோவை)

கோவையில் ஏ.ரி.எம் இயந்திரத்தில் "ஸ்கிம்மர்" என்ற கருவி பொருத்தி 12 இலட்சம் ரூபாவை திருடிய சம்பவத்தில் இலங்கை அகதி உள்ளிட்ட மூவர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கடந்த புதன் கிழமை கைது செய்துள்ளதாக கோவை மாநகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கோவை, சிங்காநல்லூர் காமராஜர் சாலையில் உள்ள தனியார் வங்கியின் ஏ.ரி.எம்.இயந்திரத்தில் ஸ்கிம்மர் கருவி பொருத்தி வாடிக்கையாளர்களின் தகவல்களை சிலர் திருடியுள்ளனர்.

பின்னர் இந்தத் தகவல்களை வைத்து வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கில் இருந்து 12 இலட்சம் ரூபாய் பணத்தைத் திருடியுள்ளனர்.

இது குறித்து கோவை மாநகர பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி 6 பேரை கைது செய்திருந்தனர்.

இதில், பி.தமிழரசன், ஜி.வாசிம், எஸ்.நிரஞ்சன், இலங்கை அகதி டி.லவசாந்தன், கிஷோர், ஆர்.மனோகரன் ஆகியோரே கைது செய்யப்பட்டு கோவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில்இலங்கை அகதியான டி.லவசாந்தன், நிரஞ்சன் மற்றும் தமிழரசன் ஆகியோரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய சைபர் கிரைம் பொலிஸார் மாநகர காவல் ஆணையருக்கு பரிந்துரை செய்திருந்தனர்.

இந்த பரிந்துரையின் பேரில் குறித்த மூவரையும் கடந்த புதன்கிழமை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் அருள்மிகு ஒலுவில் ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இம்மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் அனைத்தும்சிவன் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படவுள்ளது. (இ)

## நற்கருணை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஊரியவத்தை கிறிஸ்துஅரசர் தேவாலய பெருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நற்கருணை வழிபாடு இன்று சனிக்கிழமை மாலையும் கிறிஸ்து அரசர் பெருவிழா திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 07:15 மணிக்கும்நடைபெறும். (இ-7)

# குப்பைகளை கூட்டுப் பசளையாக்கும் திட்டம் மாற்றப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த குப்பைகளை கூட்டுப் பசளையாக்கும் திட்டம் யாழ்.மாநகரசபைக்கு இரகசியமாக மாற்றப்பட்டமைக்கு கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

குப்பைகளை கூட்டுப் பசளையாக்கும் திட்டம் கரவெட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இத்திட்டம் கரவெட்டி பிரதேசசபைக்கு அறிவிக்காது யாழ்.மாநகரசபைக்கு இரகசியமாக மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக கரவெட்டி பிர தேச சபையில் விசேட கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கூட்டப்பட்டது.

இதில் 21 கோடி ரூபாய் பெறுமதியான செயற்றிட்டம் ஒன்று எமது பிரதேச சபைக்கு வந்துள்ளது.

இதன் மூலம் வடமராட்சி பகுதியில் 70 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். குப்பை பிரச்சினை இருக்காது, அதிக வருமானத்தை ஈட்டலாம் என பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன் தெரிவித்தார்.

இதற்கு சபை உறுப்பினர்கள் அனைவரும் கரவெட்டி பிரதேச சபைக்கு வந்த திட்டத்தை யாழ்.மாநகர சபைக்கு மாற்றியதை நிறுத்துமாறும், இது தொடர்பில் நாளை மறுதினம் திங்கட் கிழமை உள்ளூராட்சி ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடுவது என்றும் இக் கலந்துரையாடலில் அனைத்துக் கட்சிகளின் ஒவ்வொரு உறுப்பினர்கள் கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் உடனடியாக தொலைநகல் மூலம் அதிகாரிகளிற்கு அனுப்பப்பட்டது. (இ-60)

# சத்திர சிகிச்சையின் மூலம் பெருந்தொகை முடி அகற்றல்

(கொழும்பு)

கல்முனை - அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பெண் ஒருவரின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் அடைத்திருந்த சுமார் ஒன்றரை கிலோ நிறையுடைய முடி நவீன சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

இந்த சத்திர சிகிச்சை தொடர்பில் வைத்தியசாலையினுடைய பொது சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மொகமட் சமிம் தனது முகநூல் பக்கத்தினூடாக கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் 25 வயதுடைய பெண் நோயாளி ஒருவர் வித்தியாசமான முறையில் வாந்தி எடுத்த வண்ணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேல் வயிற்றில் கட்டி போல் தென்பட்டதும் Endoscopy மூலம் இரைப்பை பூராகவும் முடி அடைத்து காணப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. (அளவு அதிகமென்பதால் Endoscopy மூலம் அகற்ற முடியாது.)

பின்பு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு சுமார் 1.5 கிலோ கிராம் எடையுள்ள முடி (air ball) மீட்கப்பட்டது. முடியானது இரைப்பை, முன் சிறுகுடல், சிறு குடல் வடிவில் வடிவமைக்கப்பட்டு காணப்பட்டிருந்தது.

இவர் பல நாட்களாக முடியை உட்கொண்டிருக்க வேண்டும். பொதுவாக மிருகங்களுக்கே இவ்வாறான முடி அடைப்பு நிகழ்வுகள் நடக்கின்றன.

மனிதர்களில் இவ்வாறு முடியை உற்கொண்டு வருவது மிகவும் அரிது. மன நோயாளர்களே இவ்வாறு முடியை உட்கொள்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மன நோயாளிக்கு அவருடைய இயல்பை மீட்கும் சிகிச்சை அளிக்க வேண்டும். கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சரித்திரத்தின் முதல் சத்திர சிகிச்சை இது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த சத்திர சிகிச்சைக்கு உதவிய அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம். ரகுமான் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் நன்றிகளைத்தெரிவித்துள்ளார்.(இ-7)

# 79 வயதில் பரீட்சை எழுதிய முதியவர்

(கொழும்பு)

இலங்கையில் 79 வயதான முதியவர் ஒருவர் இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதியுள்ளார்.

சட்டத்தரணியாகும் கனவில் 79 வயதான டியுடர் முனசிங்க உயர்தர பரீட்சை எழுதி மாணவர்களை மட்டுமன்றி பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருப்பதற்கு கல்வி மிகவும் முக்கிய விடயம் என டியுடர் முனசிங்க தெரிவித்துள்ளார்.

களனி, லுவிஸ் மாவத்தையைச் சேர்ந்தவரே சட்டத்தரணியாகும் எதிர்பார்ப்பில் உயர்தர பரீட்சைக்கு முகம் கொடுத்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு கலை பிரிவில் உயர்தர பரீட்சை எழுதிய அவர் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தார். எனினும் அவரின் முயற்சியை கைவிடாமல் நன்கு கல்வி கற்று இம்முறையும் உயர்தர பரீட்சைக்கு முகம் கொடுத்துள்ளார். (இ)

# பொலநறுவையில் காற்றுடன் கடும் மழை

## 10 வீடுகள் சேதம்

(பொநறுவை)

பொலநறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொட பிரதேசத்தில் திடீரென பலத்த காற்றுடன் பெய்த அடைமழையினால் பத்து வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு திடீரென பலத்த காற்று வீசியுள்ளது. சுமார் 10 நிமிடங்கள் வரை வீசிய பலத்த காற்றைத் தொடர்ந்து கனமழை பெய்துள்ளது. மழை அதிகாலை 2 மணிவரை நீடித்துள்ளது.

இதன்போது மரங்கள் முறிந்து விழுந்த நிலையில் பத்து வீடுகள் மற்றும் ஹிங்குரக்கொட ரயில்வே பாதுகாப்பு அமைப்பு ஆகியன சேதமடைந்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் முதல் குறித்த பகுதிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் அதனை சீரமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பணிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகம் ஆகியன முன்னெடுத்து வருகின்றன. (இ-7)

## ஆழிக்குமரன் ஆனந்தன்

# நீச்சல் தடாக வேலைகள் நிறைவு

(கரணவாய்)

வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டுவரும் நீச்சல் தடாகத்தின் வேலைகள் நிறைவடைந்து வரும் நிலையில் நீர் விடப்பட்டு பரிசீலிக்கப்படவுள்ளன.

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக நீச்சல் தடாகம் ஒன்று வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டு வருகிறது.இதன் வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளது.

நீச்சல் தடாகத்தில் தண்ணீர் விடப்பட்டு பரிசீலிக்கப்பட்ட பின்னரே அகழப்பட்ட பகுதிகள் மூடப்படவுள்ளன.

தண்ணீர் விடப்பட்டு பரிசீலிப்பதற்காக 8 இலட்சம் லீற்றர் நன்னீர் தேவைப்படுவதனால் இது தொடர்பில் ஆராய்வதற்காக பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை பிற்பகல் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதில் யாழ்.அரச அதிபர் நா.வேததாயகன் , பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சா.அரியகுமார், கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் த.ஐங்கரன், வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் இருதயராசா, வலிகாமம் பிரதேச சபை தவிசாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.(இ-60)

# மக்கள் வங்கி முகாமையாளரின் பதவி நீடிப்பு கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் வசந்த குமாரவின் பதவிக்காலத்தை ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பொது நிறுவனங்கள் குழு நிராகரித்துள்ளது.

கோப் குழுவின் தலைவரும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி இதனை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்த நிலையில் கோப் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் வசந்த குமார 60 வயதாகிய நிலையில் மேலும் ஒரு வருட காலத்துக்கு சேவை நீடிப்பு கோரப்பட்டது.

அவர், 2001 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபா சம்பளத்துக்கு சேவையில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சம்பள நிலுவை என்ற அடிப்படையில் அவர் தற்போது 21 இலட்சம்ரூபாவை சம்பளம் என்ற வகையில் பெறுகிறார்.

ஏற்கனவே 75 மில்லியன் ரூபாய் அவருக்கு சம்பள நிலுவையாக வழங்கப்பட்டுள்ளது என்றும் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (இ-7)

# என்னைப் பதவியிலிருந்து நீக்கம் செய்தால் அமெரிக்கப் பொருளாதாரம் சீர்குலையும்

## ட்ரம்ப் மிரட்டல்



(வோஷிங்டன்)

முன்னாள் சட்டத்தரணி மைக்கேல் கோஹென் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அதிர்ச்சியிலுள்ள ட்ரம்ப் தன்னைப் பதவியிலிருந்து நீக்கினால் அமெரிக்க பொருளாதாரம் சீர்குலையும் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட்ட போது, நடிகை உட்பட 2 பெண்கள் ட்ரம்ப் மீது பாலியல் புகார் சுமத்தினர். அவர்களுக்கு ட்ரம்பின் சட்டத்தரணி மைக்கேல் கோஹென் பணம் கொடுத்து வாயை அடைத்ததாகப் புகார் எழுந்தது.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கில் கோஹென் தான் குற்றம் செய்ததை நீதிமன்றில் ஒத்துக் கொண்டார். ட்ரம்ப் கூறியே தான் இப்படி செய்ததாக அவர் தெரிவித்திருந்தார். தேர்தல் விதிமுறைகளை மீறி பணம் கொடுக்கப்பட்டுள்ளதால் ட்ரம்பை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என அமெரிக்காவில் எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது.

இது மட்டுமல்லாமல் ட்ரம்பின் முன்னாள் உதவியாளர் பால் மானபோர்ட் வங்கிமோசடி வழக்கில் குற்றவாளி என நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சம்பவங்களால் ட்ரம்ப் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பேட்டியளித்த ட்ரம்ப், தன்னைப் பதவியிலிருந்து நீக்கினால் அமெரிக்க பொருளாதாரம் சீர்குலையும் என மிரட்டியுள்ளார். 'எல்லா வேலையையும் சரியாகச் செய்யும் ஒருவரை எப்படி பதவியி லிருந்து நீக்க முடியும்என எனக்குத்தெரியவில்லை" எனவும் ட்ரம்ப் தெரிவித்தார். (இ-7)

# சவுதி கூட்டுப்படைகளின் தாக்குதலில் 22 குழந்தைகள் உட்பட 26 பேர் பலி

(சனா)

ஏமன் நாட்டில் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்திய வான் தாக்குதலில் 22 குழந்தைகள் மற்றும் 4 பெண்கள் என மொத்தம் 26 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுதி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சனா உட்பட பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அந்தப் பகுதிகளை சுற்றி சோதனைச் சாவடிகள் அமைத்துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. அவர்கள் ஹவுதி கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலில் சில நேரங்களில் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்நிலையில், ஹோடேய்டா நகரில் இருந்து 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ள அட் துராய் ஹிமி பகுதியில் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் வான் தாக்குதலில் ஈடுபட்டன. இதில், 22 குழந்தைகள் மற்றும் 4 பெண்கள் என மொத்தம் 26 பேர் பரிதாபமாக உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

அட் துராய்ஹிமியின் ஒரு பகுதியான அல்கோயுய் எனும் இடத்தில் கிளர்ச்சியாளர்களுக்கும் சவுதி கூட்டுப்படைகளுக்கும்இடையே கடும் யுத்தம் நடைபெற்று வருகிறது. இதனால், இப்பகுதியில் இருந்து பலர் வாகனாங்களில் தப்பி வேறு இடங்களுக்குச் செல்கின்றனர். இவ்வாறு தப்பியோட முயன்றவர்களின் மீது நடை பெற்ற வான் தாக்குதலில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)



மண்டைதீவு சந்திக்கு அண்மையில் வட்டா வாகனம் ஒன்று நேற்று முன்தினம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானது. இதன்போது வாகன சாரதிக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 120 | 110 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 100 | 95 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 140 | 110 | 250 | 100 |
| தக்காளி | 50 | 80 | 80 | 60 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 140 | 60 | 60 | 150 |
| கரட் | 250 | 350 | 320 | 180 | 400 | 500 |
| பூசணி | 80 | 60 | 60 | 50 | 80 | 50 |
| புடோல் | 60 | 70 | 50 | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 100 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 160 | 140 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 40 | 40 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 60 | 120 | 120 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 80 | 140 | 120 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 90 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 120 | 250 | 150 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 100 | 60 | 120 | 50 |
| போஞ்சி | 240 | 200 | 240 | 130 | 240 | 300 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 80 | – | 70 | 120 | 50 |
| கீரை-1பிடி | 40 | 25 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 40 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 160 | 140 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 120 | 90 | 200 | 100 |
| முள்ளங்கி | 60 | 50 | 40 | 30 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 20 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 120 | 80 | 50 |

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 4 விதி எண் 7

இராகு, கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் நல்ல ஞானமும், சிறந்த அறிவும், எதையும் முன்னரே அறிந்து விடும் ஆற்றலும் உடையவராக இருப்பார்கள். கடவுள் பக்தி கொண்டவர்கள். கலகலப்பாகப் பேசும் இவர்கள் திடீரென்று தனிமையை விரும்புவார்கள். இந்த உலகத்திற்கு அப்பாற்பட்ட விடயத்தில் மூழ்கி விடுவார்கள். எப்போதும் தனிமை வயப்படுவார்கள்.


கனவில் கண்ட சில கட்சிகள் இவரை வெகுவாகக் கவரும். அதையே நினைத்து வழிபடுவார்கள். கடவுள் அருள் இருப்பதால் வேதாந்தம் பேசுவார்கள்.

கண்ணியமும் கடமையுணர்ச்சியும் மிக்கவர்கள். அளவுகடந்த ஆன்மீக ஈடுபாடு மிக்கவர்கள். ஆடம்பரத்தை வெறுப்பார்கள். அரசியல் ஞானம் பெற்றவர்கள். வலிமையான தோள்களும் கம்பீரமான தோற்றமும் உடையவர்கள். கழுத்து நீண்டிருக்கும். எல்லா வசதிகள் இருந்தும் பூரணமாக அனுபவிக்க மாட்டார்கள். நீதியை நிலைநாட்டப் பிறந்தவர்கள். செயலில் நிதானமும், தெளிவும் உடையவர்கள். ஓவியம், நாட்டியம், சினிமா போன்றவற்றில் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். தியானம், மந்திரம், யோகமார்க்கத்தால் இவர்களுக்குப் பரிபூரண பலன் கிடைக்கும். விளையாட்டுத்துறைகளில் சாதனை செய்யத் தூண்டும்.மனம் ஓய்வில்லாமல் எதையோ சிந்தித்துக் கொண்டே இருக்கும். எப்போதும் எதிர்க்கட்சியாகவே இருந்து வாதம் செய்வார்கள். உண்மையான அன்பிற்கு ஏங்குவார்கள். முன்பின் தெரியா தவரிடத்தும் அன்பு செலுத்துவார்கள். தன்னால் ஆன உதவிகளை மனமுவந்து செய்வார்கள். எண்ணமும் செயலும் புதுமையாகவே இருக்கும். திடமான உள்ளம் படைத்த இவர்கள் மற்றவர்களை குறைகூற மாட்டார்கள்.

குடும்பப் பிரச்சினைகளால் மனம் நொந்து தற்கொலை முயற்சிக்கு தயாராகி விடுவார்கள். ஆனால் அது நடக்காது. நேர்மை, நீதி, சொல் உறுதி கொண்ட இவர்களின் முயற்சிகள் வெற்றியைத்தரும். இந்த உலகையே பொய் என்று கூறி வருந்துவார்கள். எந்தக் காரியத்தையம் நிதானமாக செய்வதால் நல்ல பெயரெடுக்கின்றார்கள். பிறர் எதைக் கூறினாலும் மறக்காமல் மனதில் வைத்திருப்பார்கள்.

தனக்குப் பிடிக்காத காரியம் மற்றவர்கள் செய்தால் அவர்களை வெறு த்து ஒதுக்கி விடுவார்கள். இவர்கள் தங்களுக்கு வரும் நோய்களுக்கு மருத்துவச் செலவு செய்யாமல் தன்னிடம் உள்ள அதீத மின் காந்த சக்தியின் மூலம் சரி செய்து கொள்வார்கள்.

தனது கருத்துக்களை பிறரிடம் தெளிவாக விளக்கிக் கூறுவார்கள். கடுமையான சொற்களைக் கேட்டால் மனம் நொந்து போவார்கள். தன்னுடைய குடும்ப விவகாரங்களை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள். தவறான வழியிலும் முறை தவறியும் போக மாட்டார்கள். எவ்வளவு பணம் வந்தாலும்



மனம் சாந்தியயடை மாட்டார்கள். எப்பேர்ப்பட்ட எதிரியையும் வீழ்த்தி விடுவார்கள். கலவரத் தையும் வன்முறைகளையும் குடும்பச் சண்டைகளையும் முன்னின்று சமாதானம் பேசி முடிப்பார்கள். குருட்டு அதிர்ஷ்டத்தை நம்பாதவர்கள்.

தைரியசாலிகள் நல்ல யோசனைகள் சொல்லக் கூடியவர்கள். தூய்மையான உள்ளமிருக்கும். கலைப் பிரியர்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். புதிய சொந்தம் உடையவர்கள். தவறு செய்தவரை தண்டிக்காமல் மன்னிக்கும் மனம் உடையவர்கள். மனம் எப்போதும் ஆராய்சிலேயே இருக்கும். சிறந்த கற்பனை வளமிருக்கும். புதிய பொருட்களை படைக்கும் ஆற்றல் இருக்கும். இவர்களை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். புலன்களைக் கட்டுப்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். பிறருடைய தவறை மிகப் பகிரங்கமாக தட்டிக்கேட்பார்கள். மனம் அலைபாய்ந்து கொண்டே இருக்கும். தனிமையில் இனிமை காண்பார்கள்.

இயற்கையை இரசிப்பார்கள். சமூகத்தை தட்டியெழுப்பக்கூடிய நபர்கள். கவர்ச்சியின் மீது விருப்பு வெறுப்பு இரண்டும் இருக்கும். சில நேரங்களில் குடும்பப் பொறுப்பை விட்டு விட்டு சந்நியாசம் மேற் கொள்வார்கள். கதை, காவியம், விஞ்ஞானம் போன்றவற்றில் தேர்ச்சிகள் பெறுவார்கள். மிதமான ஆகாரத்தையே விரும்பிச் சாப்பிடுவார்கள். அழகான பொருட்கள் மீது மனதைப் பறி கொடுப்பார்கள். சாப்பாடு சிற்றுண்டி போன்றவற்றில் ஆர்வமிருக்கும்.

அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1, 10, 19, 28, 6, 15, 24.

துரதிர்ஷ்ட திகதிகள்
8, 17, 26,

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், பொன்னிறம், பச்சை.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கோமேதகம், நீலக்கல், முத்து, வைடூரியம், சந்திர காந்தக் கல், அக்கோமரின், ஜேட், ஓபல், டைகர்ஸ் ஐ.

(தொடரும்....)

ஐந்து தலை என்று சொல்வான் அப்பன்.
மகன் ஆறு தலை என்று சொல்லிவிட்டால் நெஞ்சு பிரிந்திருப்பார்... *~ மகாகவி பாரதியார்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேண்டாம் என்றால் வேண்டும் வேண்டும் என்றால் வேண்டாம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் பல்கலைக்கழக நிர்வாகப் போக்கில் அவர் ஒரு புது யுக்தியைக் கையாளுவார் என்று அவரைத் தெரிந்தவர்கள் சொல்வார்கள்.

பொதுவில் ஒரு கற்கைநெறி அல்லது ஒரு துறையை ஆரம்பிப்பதாக இருந்தால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதியையும் எடுத்த பின்பு, "... அப்படி ஒரு கற்கைநெறியை ஆரம்பிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்டுக் கொண்டது.

நான் அதனை வேண்டாமென்று கூறிவிட்டேன் என்று துறைசார்ந்தவர்களுக்கு கூறுவாராம்..."

அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஏன் வேண்டாமென்றீர்கள். அதனை பெற்றல்லவா இருக்க வேண்டும் என்று கூறுவார்களாம்.

உடனே பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மீண்டும் கதைத்து அந்தக் கற்கைநெறியை பெற்றுக் கொள்வோம் என்று கூறி தனது திட்டங்களை எதிர்ப்பின்றி செய்து முடிப்பார் என்பது அவரை அறிந்தவர்கள் கூறுகின்ற விடயம்.

இவ்வாறு அவர் செய்வதற்குக் காரணம் கற்கைநெறியை ஆரம்பிக்கச் சம்மதித்துள்ளேன் என்றால் சம்பந்தப்பட்டவர்கள் அதனை எதிர்ப்பார்கள்.

ஆகையால்தான்இப்படியொரு நடைமுறையை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பின்பற்றினார்.

இதை இவ்விடத்தில் ஏன் கூறுகின்றோம் என்றால்,

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வடக்கு கிழக்குக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயலணியில் பங்கு பற்ற வேண்டாமென கூட்டமைப்பிடம் கேட்டிருந்தார்.

ஆனால் முதலமைச்சரின் கோரிக்கையை நிராகரித்த கூட்டமைப்பினர் அபிவிருத்திச் செயலணியில் பங்குபற்றுவது எனத் தீர்மானித்துள்ளனர்.

இங்குதான் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்களின் தியரியை வடக்கின் முதலமைச்சரும் பின்பற்றி இருக்க வேண்டும்.

அதாவது, ஜனாதிபதியும் அபிவிருத்திச் செயலணியில் பங்குபற்றுங்கள் என்று கூட்டமைப்பின் தலைமையிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேட்டிருந்தால்,

கூட்டமைப்பினர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து, நாங்கள் அபிவிருத்திச் செயலணியில் பங்குபற்ற மாட்டோம் என்று கூறியிருப்பர்.

ஏனெனில் வடக்கின் முதலமைச்சர் எதைக் கேட்டாலும் அதற்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

ஆம், பொருளாதார மையத்தை ஓமந்தையில் அமையுங்கள் என்றால்; கூட்டமைப்பு இல்லை இல்லை அதை வவுனியாவில் அமையுங்கள் என்பர். முதலமைச்சர் கல்வீடு என்றால்; கூட்டமைப்பு பொருத்துவீடு என்று கூறும்.

இதுபோலத்தான் அபிவிருத்திச் செயலணியில் பங்குபற்ற வேண்டாம் என்று முதலமைச்சர் கூறினால், இல்லை பங்குபற்றுவோம் என்று கூட்டமைப்புச் சொல்லும்.

ஆக, எதுஎவ்வாறாயினும் அபிவிருத்திச் செயலணி தொடர்பில் முதலமைச்சர் மிகத் தெளிவான கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

முதலமைச்சரின் மேற்போந்த நிலைப்பாட்டுக்கான காரணங்கள் அந்தக் கடிதத்தில் தெட்டத் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ் மக்கள் அறிவது நல்லது.

### சிங்கள மக்களுக்கு காணி உத்தரவுப் பத்திரம்

## மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து முல்லையில் பாரிய அளவில் 28இல் போராட்டம்

### மகாவலிக்கு எதிரான தமிழர் மரபுரிமை பேரவை அழைப்பு

(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களுக்கு எதிரான மூன்று அம்ச கோரிக்கைகளை முன்வைத்து "மகாவலிக்கு எதிரான தமிழர் மரபுரிமை பேரவை" எதிரவரும் 28ஆம் திகதி தொடக்கம் முல்லைத்தீவில் பாரிய அளவிலான தொடர் மக்கள் போராட்டம் ஒன்றுக்கான பகிரங்க அழைப்பை விடுத்துள்ளது

மகாவலி அதிகார சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களான கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் தமிழ் மக்களின் நிலங்களில் அடாத்தாக தங்கியுள்ள சிங்கள மக்களுக்கு காணி உத்தரவுப்பத்திரங்களை மகாவலி அதிகார சபை வழங்கியுள்ளது. இதே போல் மகாவலி அதிகார சபை தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்து வரும் நிலையில் மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இணைந்து மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவை என்ற அமைப்பு ஒன்றை ஸ்தாபித்துள்ளனர்.

இந்த அமைப்பினாலேயே போராட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி மகாவலி நீர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தேவையில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் தொல்லியல் அடையாள சிதைப்பு, கலை, கலாசார, பண்பாட்டு சிதைப்பு ஆகியவற்றை உடன் நிறுத்தவேண்டும். தமிழர் நிலங்களில் அடாத்தாக தங்கியுள்ள தென்னிலங்கைச் சிங்கள மீனவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள காணி உத்தரவுப் பத்திரங்களை உடன் இரத்துச் செய்ய வேணடும் என்ற மூன்று அம்ச கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் 28ஆம் திகதி காலை 11 மணி தொடக்கம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பாரிய தொடர் மக்கள் போராட்டம் ஒன்றுக்கான அழைப்பை விடுத்துள்ளது. இந்த போராட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சி சார்ந்தவர்கள், இளைஞர், யுவதிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (2-312)

## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை (26.08.2018) மாலை 4.30 மணியளவில் கல்லூரியின் பேர்ச் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் ஜெயராஜன் அறிவித்துள்ளார். (ம)

## மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

நெல்லியடி நகரில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடி நகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று திடீர் என திருப்ப முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கொடிமரத்தின் தத்துவம் என்ன?**

கொடி மரத்தின் மேல் பாகத்தில் அக்கோயிலைக் காக்கும் தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்டு இருக்கும். ஊரைக் காக்கும் தெய்வமாக அக்கோயிலின் மூலவர் அடையாளம் காட்டப்படுகின்றார்.

கொடிக்கம்பத்தின் அடிப்பாகத்தில் திசையைக் குறிக்கும் செப்புத் தகடுகள் பொறிக்கப்பட்டு இருக்கும். பிரமோற்சவம் நடக்கப் போவதற்கு அடையாளமாக கொடியேற்றமும் செய்யப்படுகின்றது.

கொடியேறியவுடன் ஊரில் இருந்து யாரும் வெளியேறக் கூடாது என்பதற்காகவும் கொடியேற்றப்படுகின்றது. *(தொடரும்)*

## சங்கம் அங்குரார்ப்பணம்

வடமராட்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பாதுகாவலர்களை ஒன்றிணைத்து சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடமராட்சி மாலுசந்திக்கு அருகாமையில் உள்ள தனியார் க்ல்வி நிலையம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இவ் அங்குரார்ப்பண வைபவத்தில்,

தலைவராக கிருஸ்ண பிள்ளை பிரகலாதன், செயலாளராக சீலன் ரம்மியா, உப செயலாளராக தங்கவடிவேல் விஜயகுமார், ஆலோசகர்களாக தம்பையா சிவராஜா, பரஞ்சோதி சாம்ப சிவதாசன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக கந்தக்குட்டி யோகராஜா, குமாரமூர்த்தி திருக்கேஸ்வரி, வாமதேவன் வசந்தகுமாரி, கனகசபை ரவீந்திரன், கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா, வைத்திலிங்கம் உதயகுமார், வே.செல்வரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-60)

## வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த திருவிழா இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

திருவிழா திருப்பலி மணியந்தோட்டம் பங்குத்ந்தை அருட்பணி ச.மரிய செபஸ்ரியன் (OMI) தலைமையில் நடைபெறும். (இ-9,106)

## சிறந்த சாதனையாளர்கள் கௌரவிப்பும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறந்த சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு மற்றும் விருது வழங்கும் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் வாலிப கிறிஸ்தவ சங்க (YMCA) கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் வாலிப கிறிஸதவ சங்கத்தின் (YMCA) ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்கள கௌரவிக்கப் படவுள்ளனர். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்




- நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயல்பட்டால் தூய்மை பெறுவோம்.
- நாம் இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நம்மாலேயே உருவாக்கிக் கொள்ள முடியும்.
- புது மலர்களே இறைவனின் பாதங்களில் இடுவதற்கு தகுதி பெற்றவை. அதுபோல வலிமை, வளமை, அறிவுக்கூர்மை கொண்ட இளமைக்காலத்திலேயே இறைவனை அறிய முயலுங்கள்.
- ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும்.
- மேலை நாட்டு அறிவியல் நுட்பத்தோடு வேதாந்த கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் முழுமை பெற முடியும்.
- லட்சியமில்லாதவன் இருட்டான பாதையில் தடுமாறி சென்று கொண்டிருப்பான். எனவே, குறிக்கோளை ஏற்று வாழ்வு நடத்துங்கள்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரரார் வெற்றிக்கிண்ணம்-2018
# ஓல்ட்கோல்ஸ் தொடர்ந்தும் முன்னிலையில்










ஜோர்ஜ் வெற்றிக் கிண் ணத்திற்காக யாழ். சென் றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 9 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (Rating) 01.01.2018 இலிருந்து 30.04.2018 வரை நடைபெற்ற 59 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளி களின் அடிப்படையில் ஓல்ட்கோல்ஸ் அணி 12 போட்டிகளில் பங்கு பற்றி 08 போட்டிகளில் வெற்றி பெற்று 49.61 புள்ளிகளை பெற்று 1வது இடத்திலும், கே.சி.சி.சி. அணி 12 போட்டிகளில் பங்கு பற்றி 07 போட்டி களில் வெற்றி பெற்று 46.03 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்திலும், யாழ்.பல்கலைக்கழக அணி 07 போட்டிகளில் பங்கு பற்றி 05 போட்டி களில் வெற்றி பெற்று 41.08 புள்ளி களை பெற்று 3ஆம் இடத்திலுமுள்ள னர். ஏனைய கழகங்களின் நிலை பின்வ ருமாறு,

மானிப்பாய் பாரீஸ் 39.39, யாழ். ஜொனியன்ஸ் 34.07, மூளாய் விக் டோறி 28.69, சென்ற லைட்ஸ் 25.33, விங்ஸ் 24.50, கிறாஸ் கொப் பர்ஸ் 23.60, ரி.சி.சி. 22.84, ஜொலிஸ் ரார் 22.40, பற்றீசி யன்ஸ் 20.91, ஸ்கந்தாஸ்ரார் 19.18, யூனியன்ஸ் 18.42, நியூஸ்ரார் 18.23, டிறிபேக் ஸ்ரார் 14.09, றெஜின்போ 13.43, அரியாலை சென் றல் 13.14, திருநெல்வேலி YMHA 12.58, யாழ். சென்றல் 11.83, ஸ்ரான்லி 9.79, காட்லியைற்ஸ் 6.23, டிறைற்றேன் 4.76, சிறிகாமாட்சி 4.57. (கு)

## வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக் இறுதிப் போட்டிக்கு கிளியூர் கிங்ஸ் தகுதி



தேவையான நேரத்தில் அதிரடியாட்டம் பெற்ற கோலை சிறப்பாக தக்க வைத்து அசத்தலான தடுப்பாட்டம் ஆடி, வல்வை எப்.சி. அணியை வீழ்த்தி கிளியூர் கிங்ஸ் அணி இறுதிக்குள் நுழைந்தது.

வடக்கு, கிழக்கு வீரர் களை உள்ளடக்கிய வகை யில் அவர்களின் திறன் களை வளர்க்கும் வகை யில் வடக்கு, கிழக்குப் பிறி மியர் லீக் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வந்தன. 12 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியில், ரில்கோ கொங்கியூறஸ் அணி முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

இந்நிலையில், இறுதிப் போட்டிக்குள் நுழையும் இரண்டாவது அணியை இனங்காணும் போட்டி யானது கடந்த 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரை யப்பா விளையாட்டரங்கில் நடை பெற்றது. இதில் வல்வை எப்.சி. அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது.

எதிர்பார்ப்புக்கு மாறாக இன்றைய போட்டியில் வல்வை எப்.சி. அணியின் ஆட்டம் மந்தமாக மைதா னத்தில் வெளிப்பட்டது. 24 ஆவது நிமிடத்தில் கிளியூர் அணிக்கு கிடைத்த பெனா ல்ட்டி வாய்ப்பை, ஜோப் மைக்கல் கோலாக மாற் றினார். அதன் பின்னர், கிளியூர் அணி சிறப்பான தடுப்பாட்டம் ஆடியது. கிளியூர் தடுப்பாட்டத்தை மீறி வல்வை எப்.சி. அணி யினால் அந்தத் தடுப்பை உடைக்க முடியவில்லை.

61 ஆவது நிமிடத்தில், கிடைத்த கோனர் வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்திய கிளி யூர் அணியின் எஸ்.டிலக் ஸன் தலையால் மோதி சிறப்பான கோலை அடித் தார்.

இதன் பின்னர் ஆட் டத்தில் எவ்வித முன்னேற் றத்தையும் வல்லை எப்.சி அணியினால் மேற்கொள்ள முடியவில்லை. கிடைத்த 3 அருமையான சந்தர்ப்பங் களையும் வல்வை அணி யின் முன்னணி வீரர்கள் வீணாக்கினர்.

முடிவில், கிளியூர் கிங்ஸ் அணி 02:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் கிளியூர் கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் ரில்கோ கொங்கியூறஸ் அணியுடன் மோதவுள்ளது. (க-26)

## விஜஸ்காந்த்-இயலரசன் அபாரம் மத்திய கல்லூரி அணி வெற்றி




விஜஸ்காந்தின் சிறப் பான துடுப்பாட்டம் இயலர சன் மற்றும் கனிஸ்ரனின் சிறப்பான பந்துவீச்சு என்பன கைகொடுக்க, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

இலங்கை பாடசாலை கள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் ஒழுங் கமைத்து நடத்தும், பாடசா லைகளின் 17 வயதுப்பிரி வினருக்கான 50 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின், யாழ். மாவட்ட மட்ட இறுதிப் போட்டி 23 ஆம் திகதி நடை பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய சென்.ஜோன்ஸ் கல் லூரி அணி, 35 ஓவர்களில் 101 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந் தது.

பந்துவீச்சில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக, இயலரசன் 10 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டு களையும், கனிஸ்ரன் 8 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்ட ங்களுக்கு 3 விக்கெட்டு களையும் கைப்பற்றினர்.

102 ஓட்டங்களை வெற்றி யிலக்காகக் கொண்டு பதி லளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 23 ஓவர்களில் 5 விக்கெட்டு களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. துடுப்பாட்டத்தில் விஜஸ் காந்த் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், கௌசி கன் 15 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிற ந்த துடுப்பாட்ட வீரனாகவும் தேசிய 19 வயதுப்பிரிவு அணியில் இடம்பிடித்துள்ள விஜஸ்காந்த் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்துவீச்சாளராக இயல ரசனும் தெரிவு செய்யப் பட்டனர். (க-26)

## இலங்கை ரூபாயின்...

விற்பனை பெறுமதி 162 ரூபா 11 சதமாக குறைந்துள்ளதாக மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறக்குமதியாளர்கள் மத்தியில் டொலரு க்கான கேள்வி அதிகரித்துள்ளமை காரண மாகவே அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின் றது.

இதேவேளை, இந்த ஆண்டின் இது வரையான காலப் பகுதியில் மாத்திரம் 4.7 வீத த்தால் இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி யடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## செல்வச்சந்நிதி...

ள்ளது.

கடந்த 11ஆந் திகதி சனிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை விஷேட பூசைக ளைத் தொடர்ந்து முருகப் பெருமான் தேரில் ஏறி வீதிவலம் வருவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

தேர் உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கானு அடியவர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்க ப்படுவதனால் பொலிஸ் பாதுகாப்பு போடப்ப ட்டுள்ளது.

ஆலயத்தின் உட்புறம், வெளிப்புறங்களில் சிவில் உடையிலும் சீருடையிலும் பொலி ஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்தில் இ.போ.சபையினரும், தனியார் துறையினரும் சேவையில் ஈடுபடு வர். (ம-60)

## இராணுவ ஆலோசனைக்கு...

முப்படை தளபதிகளின் ஆலோசனைக ளுக்கு அமையவே வடக்கில் காணிகள் விடு விக்கப்பட்டு வருகின்றது.

இராணுவம் சம்பந்தமாக கூட்டு எதிர்க் கட்சியினால் தொடர்ச்சியாக முன் வைக்கப்படு கின்ற குற்றச்சாட்டை முழுமையாக நிராகரி க்கின்றேன்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சில குற்றச செயல்கள் தொடர்பில் பொலிஸாரால் முன் னெடுக்கப்பட்ட விசாரணைகளின் ஊடாக சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் மேலும் தீர் வொன்றை பெற்றுக் கொள்வதற்கு சட்டத்தில் இடமுள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன குறிப்பிட்டு ள்ளார். (ம)

## செல்வாக்கையும் பணத்தை...

வாராந்த கேள்வி பதிலில், ஜனாதிபதி செயலணியை முதல்வர் நிராகரித்தமை இப் பொழுது பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் ஜனாதிபதி அடுத்த கூட்டத்திற்கு அழைத்துள்ளார். உங்கள் அமைச்சர்கள் கூப்பிடப்படவில்லை. இக் கூட்டத்திற்கு அழைப்பு உங்களுக்கு விடுக்கப்பட்டதா? இவ்வாறான கூட்டத்தில் கலந்து கொள் ளாமை என்ன நன்மையைத் தரும்? என கேட்கப்பட்ட கேள்விகளின் போது மேற்கண் டவாறு தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சம்பந்தன் அண்மைக்காலங்களில் அரசியல் தீர்வை உடனே வழங்க வேண் டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின் றார். அத்துடன் வேலையற்ற பட்டதாரிகள் அவரை திருகோணமலையில் சந்தித்த போது வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பது தனக்கு முக்கியமல்ல என்றும் அரசியல் தீர் வைப் பெற்றுக் கொடுப்பதே தமது தலையாய கடன் என்ற முறையில் கூறியிருந்தார். இந்தக கருத்தைக் கிளிநொச்சி கூட்டமொன்றிலும் திரும்பக் கூறியிருந்தார்.

அதிலிருந்து அரசியல் தீர்வுக்கு அவர் கொடுத்து வந்திருக்கும் முக்கியத்துவம் புல னாகின்றது. அவரின் அந்தக் கருத்துக்குப் பலம் ஊட்டுவதாகவே ஜனாதிபதி செயலணி யில் 16 பாராளுமன்ற அங்கத்தவர்கள் பங் கேற்காமல் அரசியல் தீர்வை உடனே தர வேண்டும் என்று சேர்ந்து கோருவது எமக்கு அரசியல் ரீதியாகப் பலன் அளிக்கும் என்று சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

ஆனால் அந்தக் கருத்தை எமது பாராளு மன்ற அங்கத்தவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. தனிப்பட்ட அரசியல் செல்வாக்கை யும் பணத்தையுந் தான் அவர்கள் எதிர்பார் க்கின்றார்கள். மக்களின் சுதந்திர வாழ்வை யும் நீண்டகால அரசியல் தீர்வையும் அவ ர்கள் நாட முனைவதாகத் தெரியவில்லை. அரசியல் தீர்வைப் பெற, எமது ஒற்றுமையை எடுத்துக் காட்ட, செயலணிக்குச் செல்லாது அரசியல் தீர்வு முதலில், பொருளாதார நன் மைகள் அதன்பின் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரே குரலில் கூற முன்வந் திருந்தார்களேயானால் அரசாங்கம் அதன் பொருட்டான சர்வதேச கண்டனங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டி வந்திருக்கும்.

அரசியல் தீர்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப் பார்கள். அத்துடன் குறித்த செயலணி வேலைகளை நடாத்த நாம் அதில் பங்குபற்ற வேண்டும் என்று அவசியமில்லை. அத்து டன் இராணுவத்தினருடன் சேர்ந்து தான் நாங்கள் இந்த செயலணியில் பங்குபற்றி நட வடிக்கைகள் எடுக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. எப்படியும் எமக்கு உதவி புரிகின்றோம் என்று அரசாங்கம் உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. சேராவிட் டாலும் ஜனாதிபதி குறித்த செயலணியை நடத்தியே செல்வார்.

ஆனால் நாம் எமது ஒற்றுமையைக் காட்ட அரசியல் தீர்வை வலியுறுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம். எனக்கு செயலணியின் செயலாளர் சிவஞானசோதி ஜனாதிபதியின் அழைப்பை மீண்டும் வலியுறுத்தி அடுத்த கூட்டத்தில் சமுகமளிக்குமாறு வேண்டியு ள்ளார். அது பரிசீலனையில் உள்ளது.

கூட்டத்தில் கலந்து கொள்ளாமை, அர சியல் தீர்வின் அத்தியாவசியத்தை வலியுறு த்தும், பொருளாதார அபிவிருத்திக்கு அரசா ங்கம் கொடுக்கும் முக்கியத்துவத்தை அரசி யல் தீர்வுக்குக் கொடுக்கவில்லை என்பதை உலகறியச் செய்யும், சேர்ந்து தமிழ் பிரதி நிதி கள் இயங்கினால் எமது ஒற்றுமை வெளி ப்படும். நாங்கள் அரசாங்கத்தால் வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்காக நாக்கை நீட்டிக் கொண்டு ஓடிச் செல்கின்ற இனமல்ல என்ப தை நாம் சேர்ந்து வலியுறுத்தலாம்.

இராணுவத்தினர் மக்கள் முன்னேற்ற த்தில் ஈடுபடுதலைக் கண்டிக்கலாம், செய லணி கூட்டத்திற்குப் போகாமலே எமது மக் களின் பொருளாதார விருத்தியை உறுதி செய்யலாம். அவர்கள் செய்வதில் தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டலாம்.

சிலர் மகாவலி காணி அபகரிப்பைத் தடு க்க இதில் சேர வேண்டும் என்கின்றார்கள். பாராளுமன்றத்தில் எமது உறுப்பினர்கள் செய்ய முடியாததை செயலணியில் சேர்ந்து செய்ய முடியும் என்று இவர்கள் கூறுவது விந்தையாக இருக்கின்றது.

முன்னர் வழிநடத்தல் குழுவில் சேர்ந்த போது எமது அரசியல் கருத்துக்களை நாம் வலியுறுத்திப் பேசவில்லை. எமக்கென சில அரசியல் சிபார்சுகள் இருப்பதாகவும் நாம் கூறவில்லை. ஈற்றில் அரசாங்கத்தின் கரு த்துப்படியே எல்லாம் நடந்தேறி வருகின்றன. அதற்கு எம்மவர்கள் ஒத்துழைத்து வருகின் றார்கள்.

ஜனாதிபதி செயலணியில் எமது பாராளு மன்ற உறுப்பினர்கள் முப்படையின ருட னும் சேர்ந்து ஒரே மேசையைச் சுற்றிக் கூடி யிருந்து வடக்கு கிழக்கின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டு படையினர்க ளுக்கெதிரான யுத்த குற்றங்கள் பற்றி சர்வ தேச அரங்குகளில் குறிப்பாக ஜெனிவாவில் பேசப் போகின்றார்களா? அப்படிப் பேச எத்த னித்தால் இப்பொழுது தான் படையினருடன் பொருளாதார விருத்தி சம்பந்தமாகச் சேர்ந்து விட்டீர்களே இனி ஏன் யுத்த குற்ற விசா ரணை? அவர்களைக் கொண்டே உங்கள் இடங்களை அபிவிருத்தி செய்யுங்களே? என்று சர்வதேச ரீதியாகக் கேட்கப் போகி ன்றார்கள்.

படையினரைச் சேர்க்காவிட்டால் மட்டும் தான் நாங்கள் செயலணியில் செயல்படு வோம் என்று கூட இவர்கள் கூறுவார்களோ தெரியாது. அதற்கு நெஞ்சுரம் வேண்டும். செயலணியில் படையினருடன் சேர்ந்து செயல்படுவது எமக்கு பாதிப்பையே ஏற்படு த்தும். செயலணியால் செயல்படுத்த இருக்கும் திட்டங்கள், நிகழ்ச்சி நிரல்கள் யாவையும் அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாகத் தயாரிக்கப்பட்டவை. அவற்றை வேண்டு மெனில் அவர்களே செயல்படுத்த விட்டு விட்டு நாம் ஒதுங்கி இருந்து அரசியல் தீர்வை அத்தியாவசியப்படுத்துவதே தற்போதைய உசிதமான செயற்பாடு என மேலும் தெரிவி த்துள்ளார். (ம-9)

## நேர்த்தியை பூர்த்தி...

பெற்றுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை வல்லி புர ஆழ்வார் ஆலயத்தில் இருந்து தொண் டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு பக்தர் ஒருவர் தூக்குக் காவடி நேர்த்திக் கடனை செய்துள்ளார்.

காவடி மந்திகைப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது உழவு இயந்திர பெட்டி க்குள் இருந்த மின் பிறப்பாக்கிக்கு பெற்றோல் நிரப்ப முற்பட்ட போது திடீர் என தீப்பற்றிய தாக கூறப்படுகிறது. இதனைச் சுதாகரித்துக் கொண்டு பெட்டிக்குள் இருந்தவர்கள் மின் பிறப்பாக்கியை தூக்கி வெளியே வீசியதாக கூறப்படுகிறது. (ம-60)

## கைது செய்யப்பட்டு...

பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதனடிப்படையில் அங்கு சென்ற பொலிஸா ரால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இரு வர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அடுத்தநாள் காலை குறித்த நப ர்கள் இருவரும் பொலிஸாரால் விடுவிக்கப்ப ட்டுள்ளனர்.

இதே வேளை அண்மையில் யாழ் நகர் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் பெரும் பான்மை இனத்தவர்களின் நகை பணம் என்பன திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்த க்கது. (ம-9)

## இரு இளைஞர்கள்...

திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. (ம)

## சிவில் உடைகளில் இருந்த...

அதிரடிப்படையினர் அவர்களுடைய வாகனத்தில் வந்துள்ளனர், அவர்களும் சிவில் உடையில் இருந்துள்ளனர்.

அப்போது வாகனத்தில் வந்த விசேட அதி ரடிப்படையினரை பொலிஸார் மறித்துள் ளனர். தாங்கள் விசேட அதிரடிப்படையினர் என தெரிவித்துள்ளனர். அப்போது அவர் களை மறித்த பொலிஸார் தமது அடையாள த்தை உறுதிப்படுத்தி தாம் பொலிஸார் என் றும் உங்கள் அடையாளத்தை உறுதிப்படு த்துங்கள் என கோரியுள்ளனர்.

அப்போது இடம்பெற்ற வாக்குவாதத்தில் பொலிஸார் ஒருவர் விசேட அதிரடிப்படை அதிகாரியை தாக்கியுள்ளார். அப்போது அவ் விடத்தில் பாரிய மோதல் ஏற்பட்டுள்ளது. பின்னர் சமரசமாகி பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

இதே வேளை யாழ் நகரில் நின்றிருந்த பொலிஸார் மது போதையில் இருந்ததாக வும் இது குறித்து விசாரணை செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ம-9)

## வீதி விபத்துக்குள்ளான...

யில் உள்ள கோவிலுக்கு துவிச்சக்கர வண்டியில் சென்றுவிட்டு வீடு திரும்பும் போது புலோலி முதலாம் கட்டை சந்திக்கு முன்னோக்கி செல்லுவதற்கு சென்ற போது யாழில் இருந்து வந்த வான் இவரை மோதி சிறு தூரம் இழுத்து சென்றுள்ளது. சம்பவ இட த்தில் காயமடைந்து மயக்கமடைந்த நபரை அருகில் இருந்தவர்கள் மந்திகை வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்திய சாலைக்கு இரவு 10.30 மணிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நபர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்து ள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (ம-9)

## சிக்கல் நிலைமை...

பான தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றவு டன் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான முயற்சிகளை எடுப்போம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதில் சிக்கல்நிலை தோன்றியுள்ளது. அதாவது தேர்தலை எம் முறைமையில் நடத்துவது என்பதில் உடன் பாடற்ற தன்மை காணப்படுகின்றமையா னது தேர்தல் பிற்போடப்படுவதற்கு காரண மாகியுள்ளது.

இருந்தபோதிலும் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன் னெடுத்து வருகின்றோம். எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பான இறுதித் தீர்மானங்க ளின் அடிப்படையில் தேர்தலை விரைவில் நட த்துவதற்கான முயற்சிகளை எடுப்போம். (ம)

## தேர்தலை நடத்தக்கோரி...

தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் மாகாண சபை பிரதிநிதிகளின் ஒன்றியத்தினர்,

ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கங் கள் என்பது ஜனநாயகத்தை மதிக்காத, தேர் தலை ஒத்திவைக்கின்ற அரசாங்கங்கள் என் பது வரலாற்று ரீதியான அறிந்த உண்மை.

இதனால் மக்கள் வீதியில் இறங்கி போரா ட்டம் நடத்துவதற்கு முன்னர் மாகாண சபைத தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் எனவும் கூட்டு எதிர்க் கட்சியின் மாகாண சபை பிரதிநிதிகளின் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ம)

## தென்பகுதியினர்...

கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாக கொண்டு நேற்றைய நாடாளுமன்ற அமர் வில் உரையாற்றிய போதே விமல் வீரவன்ச இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் குறுக்கிட்ட தேசிய கலந்து ரையாடல்கள், அரசகரும மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன்,

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப் பில் நுழைந்து மீன் பிடிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. தென்பகுதி மீனவர்களு க்கு வடபகுதியில் மீன்பிடிக்க தடையில்லை.

ஆனால் அவர்கள் சட்டவிரோத மீன்பிடி யில் ஈடுபடுவதற்கே எதிர்ப்பு தெரிவிக்கப்படு கின்றது. இதற்காக இனவாத கருத்துக்களை தெரிவிக்க வேண்டாம். இனவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினை தொட ர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என குறிப்பிட்டார். (ம)

### மெகா பவர்

திகதி 24/08/2018
சீட்டிழுப்பு இலக்கம் 270
வெற்றி எழுத்த: D | சுப்பர் இலக்க: 08 | வெற்றி இலக்கங்கள்: 21 27 41 57
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2018/08/24
சீட்டிழுப்பு இலக்கம் 3731
ஆங்கில எழுத்து: F | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 2 4 0 1 7 5
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2018.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 1861
ஆங்கில எழுத்து: K | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 08 22 34 48
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2018-08-24
சீட்டிழுப்பு இலக்கம் 40
ஆங்கில எழுத்து: W | வெற்றி இலக்கங்கள்: 23 52 63 68
தேசிய லொத்தர் சபை



சிறப்பு கருவள / மகப்பேற்று சிகிச்சை

**Mc Leod - இணுவில் வைத்தியசாலை**

இணுவில் மகப்பேற்று வைத்தியசாலை கருவள சிகிச்சைப் பிரிவில் IUI, IVF தொடர்பான சிகிச்சையினை மிகச் சிறந்த தேர்ச்சி பெற்ற **யாழ்ப்பாண** மகப்பேற்று வைத்திய நிபுணராலும் மற்றும் கொழும்பின் பிரபல கருவள சிகிச்சை நிபுணர் **Dr.ரத்னாயகவினாலும்** குறைந்த கட்டணத்தில் பல சலுகைகளுடன் இணுவிலில் வழங்கப்படுகின்றது.

**மேற்கூறிய வைத்திய நிபுணர்களின் சேவைகளுக்கு எமது மக்களின் சார்பாக நன்றிகள்**

விபரங்களுக்கும் முன்பதிவுகளுக்கும்

**021 224 1569,**
**076 394 4346**

இணுவில் வைத்தியசாலை,
கே.கே.எஸ் பிரதான வீதி — நிர்வாகம்

(சி-3585)



**நடமாடும் மிருக வைத்திய சேவை**

குரும்பசிட்டி தெல்லிப்பழைக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு.
தொடர்பு **Dr.K.** கிருபாகரன்
**077 973 8802**
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.



**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



(C-3569)

UK– 550 /=Kg
கனடா–900 /=Kg
ஜேர்மனி– 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


## எல்லை நிர்ணய...

தோல்வியடைந்தது. மாகாண சபைத் தேர்தல் எல்லை மீள் நிர்ணய அறிக்கை மீதான வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஒன்றிணைந்த பொது எதிரணி ஆகியன எதிராக வாக்களித்தன. மக்கள் விடுதலை முன்னணி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

மாகாண எல்லை நிர்ணய அறிக்கை தோல்வியடைந்ததால் அரசு தீர்மானித்தால், ஆட்சிக் காலம் நிறைவடைந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை பழைய விகிதாசார முறைப்படி நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பணிப்புறக்கணி...

வில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது சம்பள பிரச்சினைக்கு உரிய தீர்வு எட்டப்படாத நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலும் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


**ஆடை வடிவமைப்பாளர்கள் தேவை**

137, Post box, Junction Palaly Road, Thirunelvely இல் இயங்கி வரும் **நியூ மிலான் ரெக்ஸ் ரெயிலர்களுக்கு** ஆடை வடிவமைப்பாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தேவை. வெளிமாவட்ட வேலை ஆட்களுக்கு தங்குமிட வசதிகளும் வழங்கப்படும். **தொடர்புகளுக்கு:**

**0771387239, 0212214184**

(5465)



**வீடு வாடகைக்கு**

ஆனைக்கோட்டை பொன்னையா லேனில் சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. வாடகையும் முற்பணமும் பேசித் தீர்மானிக்கப்படும். அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. (5467)

**தொடர்பு: 0777656918**



**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-3564)



# உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

**வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்**

ISO 9001:2008 CERTIFIED

THE 10TH SLIM BRAND EXCELLENCE

உள்ளூர் மற்றும் சர்வதேச அரங்கில் பங்களிப்பதிலும் British Way English Academy முன்னிலையில் இருப்பதையிட்டு பெருமிதம் கொள்கிறோம்





# British Way® English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

எந்த மாற்று வழியுமில்லை British Way

இதுவே வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான உலகின் தலைசிறந்த இடம்...

• NITTAMBUWA • GALLE • MATARA • ANURADHAPURA • KANDY • KURUNEGALA • KIRIBATHGODA • BANDARAWELA
• NUGEGODA • GAMPAHA • NEGOMBO • POLONNARUWA • RATHNAPURA • JAFFNA • EMBILIPITIYA • KALUTARA

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

04th, 06th of September, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

(சி-247)

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

23rd of September, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## IELTS

**சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## KIDS' Class — Grade 1-10

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**Contact (Jaffna Branch) 021 300 55 55**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.